Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 40 | புதன்கிழமை 05 ஜனவரி 2022 | மார்கழி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

## யாழில் மலேரியா நால்வருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். போதனா மருத்துவமனையில் மலேரியாத் தொற்றுடன் நேற்றும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபோரம் என்ற மூளை மலேரியாவை ஏற்படுத்

15 ➤

### எவர் கையொப்பமிடாவிட்டாலும்-

# இந்தியாவுக்கு கடிதம் அனுப்பியே தீருவோம்!

### வினோநோகராதலிங்கம் எம்.பி. சூளுரை



வவுனியா, ஜனவரி 5

இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்புவதற்காக ரெலோ எடுத்த முயற்சியிலிருந்து யாராவது பின்வாங்க விரும்பினால் அல்லது கையொப்பம் இடமறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலக்கிவைத்துவிட்டு, அந்தவரைவை கையொப்பமிட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம் – என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

15 ➤

### கொழும்பு அரசியலில் திருப்பம்

## சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப் பதவி பறிப்பு!

### ஒட்டோவில் வீடு திரும்பினார்



கொழும்பு, ஜன. 5

தெற்கு அரசியலில் முக்கிய பல பதவிகளை வகித்த மூத்த அரசியல்வாதியான சுசில் பிரேமஜயந்த, அவர் வகித்த இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நேற்று அதிரடியாக நீக்கப்பட்டார். அரசமைப்பின் பிரகாரம் தனக்குள்ள தத்து

15 ➤

## "அரசியல் ஆசீர்வாதமே இது"

### ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு சிரித்தபடியே பதிலளித்த சுசில்



கொழும்பு, ஜன. 5

"பதவி விலக்கப்பட்டதை எனது எதிர்கால அரசியலுக்கான ஆசீர்வாதமாகவே கருதுகின்றேன்."- என்று இராஜாங்க அமைச்சுப்

15 ➤

## வெளிநாட்டு அழுத்தங்களுக்கு ஒருபோதும் அடிபணியோம்!

### மாகாண சபைத் தேர்தல் நடக்கவே நடக்காது கூறுகின்றார் அமைச்சர் கம்மன்பில

கொழும்பு, ஜன. 5

மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசுக்குள் கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை.

அதேபோல, வெளிநாடுகளிலிருந்து அழுத்தங்களும் பிரயோ கிக்கப்படவில்லை - என்று இணை அமைச்சர

15 ➤

### முச்சந்தி முரளி



"அப்ப இனி அரசாங்கத்துக்கு எதிராக கதைச்சால் இப்படித்தான் எல்லோருக்கும் காத்துப் பிடுங்குவம் எண்டு வெருட்டுகினம் போல..."

## இன்னொரு அமைச்சரின் பதவியும் 'அம்போ'?

கொழும்பு, ஜன. 5

இலங்கை அரசாங்கத்தை விமர்சித்து வருவதன் காரண

15 ➤

### 20 ஐ உடனடியாக நீக்கிவிட்டு –

## குறைகளை நிவர்த்திசெய்து '19' ஐ நடைமுறைப்படுத்தவும்

### மைத்திரிபால கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

'20'ஆவது அரசமைப்புத் திருத்தத்தை உடனடியாக நீக்க வேண்

15 ➤

## பனியும் குளிரும் வடக்கில் அதிகரிப்பு

*9 இலிருந்து மழைக்கு வாய்ப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

வட மாகாணத்தில் தற்போது, பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. அதனால் குளிரும் அதிகரிக்கும். எனினும், எதிர்

15 ➤

## வயிற்றைக் கிழித்தது மாடு: வளர்த்தவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 5

கோவில் மாடுகளைப் பராமரிக்கும் நபரின் வயிற்றை, ஒரு மாடு கொம்பால் குத்தி கிழித்திருந்த நிலையில், அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

15 ➤

## சுசிலுக்கு சஜித் அணி அழைப்பு!

கொழும்பு, ஜன. 5

ஜனநாயகத்துக்காகவும், மக்களுக்காகக் குரல்கொடுப்பதற்காகவும்

11 ➤

## ஆதவனின் சாவில் சந்தேகம்!

*மல்லாகம் நீதிமன்றில் அவரது குடும்பத்தினர் மனு*

யாழ்ப்பாணம், ஜன. 5

கடந்த செப்ரெம்பர் மாதம் மர்மமான முறையில் கிணற்றிலிருந்து சடலமாக

12 ➤




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்குக

## இராமேஸ்வரம் மீனவர்சங்கத் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 5

இலங்கை - இந்திய கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேசி, உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை-இந்திய நடுக்கடலில் இலங்கைக் கடற்படையின் பிரச்சினையின்றி இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க மத்திய, மாநில அரசுகள் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி, முடிவெடுக்கவேண்டும். அத்துடன் இலங்கைக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

இலங்கைச் சிறையிலுள்ள 68 தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த 13 நாள்களாக தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மீன்வ எத்துறை அதிகாரிகள் மீனவர்களுடன் பேச்சு நடத்தி, இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய துரித நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர். இதையடுத்து மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தைக் கைவிட்டனர். இதன்பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா இவ்வாறு தெரிவித்தார். (ம-56)

## பாலியல் தொந்தரவு: ஆசிரியருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஜன.5

மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஆசிரியரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் கடந்த 24ஆம் திகதி கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது. நேற்றுவரை சந்தேகநபரை நீதிமன்று விளக்கமறியலில் வைத்தது.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்தது நீதிமன்று. (எ-19)

## திருமலை எண்ணெய்க் குதங்களை மீட்டமை மிகப்பெரும் வெற்றி!

### உதய கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜன.5



இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த திருகோணமலை எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தை மீண்டும் எமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளமை எமக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும். ஜனவரி மாதம் 12ஆம் திகதி திருகோணமலை எண்ணெய் களஞ்சிய நிலையத்தில் இலங்கைக் கொடியை பறக்கவிடுவோம்.

இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருகோணமலை எண்ணெய்க் களஞ்சிய நிலையத்தை இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொய்யான செய்திகளைப் பரப்புகின்றனர். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிலுள்ள 24 எண்ணெய்க் குதங்கள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனம் மூலமாக நிர்வகிக்கப்படும் 61 எண்ணெய் குதங்களையும் இணைத்து 85 எண்ணெய்க் குதங்களின் நிர்வாக அதிகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசமே இருக்கும். இலங்கை ஐ.ஓ. சிக்கு 14 எண்ணெய்க் குதங்களே இருக்கும்.

2016 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த எண்ணெய்க் களஞ்சிய நிலையத்துக்குச் சென்ற எமது அதிகாரிகளை இந்திய அதிகாரிகள் தடுத்து நிறுத்தியதுடன், இந்தியாவின் நேரடித் தலையீட்டில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளைக் கைதுசெய்தனர். இவ்வாறு தண்டிக்கப்பட்ட எமது அதிகாரிகள் மூலமாகவே இலங்கைக் கொடி பறக்கவிடப்படும்- என்றார். (எ-இ)

### பொலிஸார் முன்னிலையில்

## வன்முறையில் ஈடுபட்ட நால்வர் நேற்றுக் கைது

வவுனியா, ஜன. 5

வவுனியாவில் பொலிஸார் முன்னிலையில் வன்முறையில் ஈடுபட்ட நான்கு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

வர்த்தக நடவடிக்கைகள் அதிகமுள்ள வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அலைபேசி விற்பனை நிலையத்துக்குச் சென்ற சிலர் அங்கிருந்தவர்களுடன் முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பண்டாரிகுளம் மற்றும் கோவில் குளம் பகுதிகளிலிருந்து முதலாம் குறுக்குத் தெருவுக்குக் குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச்சென்ற பொலிஸார் இரண்டு மணிநேரமாக விசாரணைகளை மேற்கொண்டதுடன், குறித்த வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு, அங்கிருந்த இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்ல முற்பட்டுள்ளனர். இதன்போது, பொலிஸாருக்கு முன்பாகவும் அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்தே நால்வர் கைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-110)

## நினைவு நிகழ்வு

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தலும், நினைவுப் பேருரையும் இன்று இடம்பெறவுள்ளது. யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## புத்தாண்டு தினத்தில் 12 பிரசவங்கள்

யாழ்ப்பாணம், ஜன.5

கடந்த புத்தாண்டு தினத்தன்று யாழ். போதனா மருத்துவமனையில் 12 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது 8 ஆண் குழந்தைகள் மற்றும் 4 பெண் குழந்தைகள் பிறந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

### கடந்த ஆண்டில்

## யாழ்ப்பாணம் போதனாவில் 2 இலட்சம் பேருக்குச் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 473 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு மருத்துவமனை விடுதியில் தங்கி ஒரு இலட்சத்து நான்காயிரத்து 993 பேரும் வெளிநோயாளர் பிரிவில் 85 ஆயிரத்து 480 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று மருத்துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2020ஆம் ஆண்டைக் காட்டிலும் கடந்த 2021ஆம் ஆண்டில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது எனவும் கொரோனா மற்றும் பயணக்கட்டுப்பாடு காரணங்களாலேயே இவ்வாறு குறைவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# பொருளாதாரத் திட்டத்தை உருவாக்க எதிரணியின் ஒத்துழைப்பு பெறப்படும்

## அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5

பொருளாதார வேலைத்திட்டமொன்று அவசியம். இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது. அடுத்தவாரத்திலும் சந்திப்பொன்று நடைபெறும். இதற்கு எதிரணியின் ஒத்துழைப்பும் பெறப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, 'மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே, மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான பொருளாதார வேலைத் திட்டமொன்று இருக்கிறதா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'பொருளாதார வேலைத்திட்டமொன்று அவசியம் என்பதை ஏற்கிறோம். நாடாளுமன்றத்திலும் கலந்துரையாடப்பட்டு, உரிய வேலைத்திட்டம் கட்டியெழுப்பப்படும். இதற்கு எதிரணியின் ஒத்துழைப்பைப் பெறவும் எதிர்பார்க்கின்றோம். சமுர்த்திப் பயனாளிகள் உட்பட பொருளாதாரரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சிறு அளவேனும் நிவாரணம் அவசியம் - என்றார். (ம-44)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடிப்படைக் கொள்கைகளை எதற்காகவும் மாற்றமுடியாது

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.5**

**தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக இதுவரை பின்பற்றி வந்த கொள்கைகளின் அடிப்படைகளை எந்தக் காரணத்துக்காகவும் விட்டுக்கொடுக்கமுடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**



இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதற்காக தமிழ்க் கட்சிகளால் உருவாக்கப்பட்ட ஆவணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நிராகரித்துள்ள நிலையில், அடுத்த கட்டம் தொடர்பில் வினவப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது தமிழ்பேசும் இனக் குழுமங்களின் எதிர்காலத்துக்காக முஸ்லிம் மற்றும் மலையக சமூகங்களின் கரிசனைகளை மதிக்கிறோம். இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு அனுப்பப்படும் கூட்டு ஆவணத்தில் கைச்சாத்திடுவது என்பதில் உறுதியாக இருக்கின்றோம். அந்த ஆவணம் கடந்த 21ஆம் திகதி அனைத்து தலைமைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உருவாக்கப்பட்ட ஆவணமாக இருக்கவேண்டும் என்பதில் ஆழ்ந்த கரிசனையைக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடந்த டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி வரைபொன்றுக்கு இணக்கம் வெளியிட்டனர். அந்த வரைவு 22ஆம் திகதி அனைத்துத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த வரைவில் கையொப்பமிடுவதற்கு எமது தரப்பில் எவ்விதமான தயக்கங்களும் இல்லை. ஆனால் மீள்திருத்தப்பட்ட வரைவில் எமது மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக இதுகால வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகளின் அடிப்படைகள் மாறுபட்டுள்ளன. முரண்பட்டுள்ளன.

அவ்வாறான கொள்கை முரண்பாட்டு நிலைப்பாடொன்றை நாம் எடுத்துவிட முடியாது. அது தவறானதாகும். அதனால் எமது நிலைப்பாடுகளை தெளிவாக முன்வைத்துள்ளோம். எமது கொள்கைகளின் அடிப்படைகளை மீறும் வகையிலான விடயங்களுக்குத் துணை போகமுடியாது. அவற்றை விட்டுக்கொடுக்கவும் முடியாது.

அதற்காக, நாம் மலையக, முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களையும் ஒருங்கிணைத்து செல்வதில் பிரயத்தனம் செய்கின்றோம். அதற்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் தயாராக உள்ளோம். முஸ்லிம், மலையக இனக்குழுமங்களின் அரசியல் தலைமைகள் தமது இனங்களைச் சார்ந்து கொண்டிருக்கின்ற கரிசனைகளுக்கு மதிப்பளிக்கின்றோம்-என்றார். (எ-இ)

## இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.5

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவரை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் இருந்து கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களே தமிழகக் கடலோர காவல் படையால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இயந்திரக் கோளாறு காரணமாக படகு எல்லைதாண்டிச் சென்றது என்று நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. நாளை மீனவர்கள் இருவரும் நீதிமன்றால் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## யாழ்ப்பாணம் போதனாவின் பணிப்பாளராக நந்தகுமாரன்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் கே.நந்தகுமாரன் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவால் நேற்றுமுன்தினம் இந்த நியமனக்கடிதம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக இருந்த மருத்துவர் த.சத்தியமூர்த்தி மேற்படிப்புக்காக மீண்டும் வெளிநாடு சென்றுள்ள நிலையில், தற்காலிகமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மருத்துவர் கே.நந்தகுமாரன் வடமாகாணத்தின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகவும் தொடர்ந்து செயற்படவுள்ளார். (ம-20)

# இரு மாதங்களுக்கான மருந்துகளே இருப்பில்

கொழும்பு, ஜன. 5

நாட்டில் இரண்டு மாதங்களுக்குத் தேவையான மருந்துகளே கையிருப்பில் உள்ளன என்று இலங்கை ஔடத இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஔடத இறக்குமதிக்கான முன்பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் வேறு சில துறைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக ஔடதங்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஔடத இறக்குமதிக்காக முன்னர் வழங்கப்பட்ட முக்கியத்துவம் தற்போது வழங்கப்படுவதில்லை. நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 80 சதவீதமானவை இறக்குமதி செய்யப்படுகின்றன. எனினும், இறக்குமதிக்கான தடைகளை உடனடியாக நீக்காவிடின் பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)




யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின்ர பெரியவர் பெரிய படிப்புக்காக லண்டனுக்குப் போட்டார். அப்ப அவர் வரும்வரைக்கும் (ஆறுமாசத்துக்கு) அடுத்த பெரியவர் ஆரெண்டு கடும் போட்டியாம். இப்பிடியிருக்கேக்க திடீரெண்டு, சுகாதார அமைச்சு ஒருத்தரை பதில் பணிப்பாளராப் போட்டுட்டுது. ஆனால் இது சிலருக்குப் பிடிக்கேலையாம். குறிப்பா பிரதிப்பணிப்பாளரா இருக்கிற ஒரு டாக்குத்தர் இதை குழப்பிறதுக்கு நிக்கிறாராம். "நான் தான் பிரதிப் பணிப்பாளர். அப்ப என்னைத் தானே பணிப்பாளர் ஆக்க வேணும். அதை விட்டிட்டு எப்பிடி புதிசா ஒராளைப் போடலாம். அப்பிடி விட ஏலாது. நான்தான் பதில் பணிப்பாளர்'' என்ட மாதிரி கதைக்கிறாராம், நடக்கிறாராம்.

ஆஸ்பத்திரியளை சனம் கோயில் மாதிரித்தான் பாக்குது. ஆனால் சிலரின்ர செயற்பாடுகளால அது இப்ப அரசியல்மேடை மாதிரி மாறிக்கொண்டே போகுது. வருத்தத்தோட வாற சனத்துக்கு எப்பிடிச் சரியான சேவை செய்யிறது எண்டு யோசிக்காமல், எந்தக் கதிரையில எப்ப இருக்கலாம்? எண்டு திட்டம் போடுறதே ஆஸ்பத்திரியளில இருக்கிற சிலருக்கு தொழிலாப் போச்சுப் பாருங்கோ.

★★★★

முந்தநாள் ஆரும் ஏதும் அலுவலா அரசாங்க ஒப்பீஸுகளுக்கு போயிருந்தீங்கள் எண்டால் , அண்டைக்கு முழுக்க கடுப்பில வெந்திருப்பியள். அண்டைக்கு காலமைதான் எல்லா ஒப்பீஸிலையும், சிங்கக் கொடியை ஏத்தி , "நாங்களெல்லாம் அர்ப்பணிப்பா சனத்துக்கு சேவை செய்வம்" எண்டு எல்லா உத்தியோகத்தர்மாரும் சத்தியப்பிரமாணம் செய்து போட்டு, புதுவருசக் கொண்டாட்டங்களில இறங்கிட்டினம். மீட்டிங்குகள் வைச்சு "இந்த வருசம் என்னென்ன செய்யவேணும்'' எண்டு திட்டம் போட்டுக் கொண்டு இருந்ததால, அண்டைக்கு அவையின்ர ஒப்பீஸுகளுக்கு போன சனத்தை திருப்பி விட்டதுதான் மிச்சம்.

இதுக்கிடையில இன்னொரு கதையும் காதில விழுந்திச்சு. அதையும் சொல்லத்தானே வேணும். யாழ்.மாவட்டத்தில உள்ள பிரதேச செயலகம் ஒண்டில, மத்தியானச் சாப்பாட்டுக்கெண்டு பகல் 11 மணிக்கே உத்தியோகத்தர்மார் மோட்டர் சைக்கிள்களில முறுக்கிக் கொண்டு வெளிக்கிடுகினமாம். சரி, வேளைக்கு போய் வேளைக்கு வருவினம் எண்டு சனம் பார்த்துக் கொண்டு நிண்டால், அவை வர ரண்டு மணி தாண்டுதாம். மத்தியானச் சாப்பாடு முடிய தங்கட பிள்ளையளை ரியூசனுக்கும் கொண்டு போய் விட்டிட்டு வரத்தான் அப்பிடி லேட் ஆகுதெண்டு சாட்டும் சொல்லுகினமாம். ஒப்பீஸர்மார் வீட்டு வேலையளும் பாக்கத்தான் வேணும். ஆனால் அதுக்காக சனத்தைக் காக்க வைச்சிட்டு தங்கட அலுவல் பாக்கிறதும் பிழையெல்லோ?



- பச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொட்டிலை ஆட்டிக்கொண்டு பிள்ளையைக் கிள்ளும் தமிழரசு

## சினக்கிறார் சிவாஜிலிங்கம்

கொழும்பு, ஜன.5

**இந்தியப் பிரதமருக்கு அனுப்பும் ஆவண வரைவைத் தயாரிக்கும் குழுவில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இருக்கும்நிலையில், அவரது கட்சி அந்த ஆவணத்தை நிராகரிக்கின்றது. இதன் அர்த்தம் என்ன?**



இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

வல்வெட்டித்துறையில் அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் இந்தியாவுக்கொரு முகம், சர்வதேசத்துக்கொரு முகம், தென்னிலங்கைக்கொரு முகம், தமிழ் மக்களுக்கொரு முகம் என வேடமிடுகிறார்களா என்ற கேள்வியை நாங்கள் எழுப்புகிறோம்.

சுமந்திரன் போன்றவர்களின் நடவடிக்கையைப் பார்த்தால் தொட்டிலை ஆட்டிக் கொண்டு பிள்ளையைக் கிள்ளுகிறார்கள் என்று சொல்லக் கூடிய நிலைமைதான் இருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்த கருத்து மிகவும் வேடிக்கையானது.

13ஆம் திருத்தம் பயனில்லை என்று கூறுகின்றார். இருக்கக்கூடிய விடயங்களை நடைமுறைப்படுத்தக் கோருவது தவறல்லவே. அரசமைப்பைப் போற்றிப் பாதுகாப்போம் என்று கூறுபவர்கள் அதை நிறைவேற்ற வேண்டும்.

தமிழரசுக் கட்சி பொதுசன வாக்கெடுப்புக்கு ஏன் தயங்குகிறது? இலங்கை அரசுக்கு நோகக் கூடாது என்ற அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதியினர் செயற்படுகிறார்களா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

சுமந்திரனது இல்லத்தில் தயாரிக்கப்பட்ட வரைவை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல்குழு நிராகரிக் கின்றது. இரண்டிலும் சுமந்திரன் உள்ளார். இதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய குழப்பங்களைத் தீர்க்க வேண்டியது தமிழரசுக் கட்சியின் கடமை. 13ஐ நடைமுறைப்படுத்துங்கள். ஆனால் அது நிரந்தரத் தீர்வுமல்ல. தமிழ் மக்கள் மத்தியில் பொதுசன வாக்கெடுப்பை நடத்தி அவர்களே தங்கள் தலைவிதியை தீர்மானிப்பதாக இருக்கவேண்டும் - என்றார். (எ-26)

## இ.போ.ச.சாரதி உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜன.5

வீட்டில் நெஞ்சுவலி ஏற்பட்டு, மயங்கி வீழ்ந்த இ.போ.ச. சாரதி ஒருவர், மருத்துவமனைக்குக் கொண்டு வரும் வழியில் உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் சாவகச்சேரி கற்குளி வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை லக்ஸ்மிகாந்தன் (வயது - 60 )என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இறப்புத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மற்றும் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-4-9)

## எரிவாயுத் தட்டுப்பாடு: மண் அடுப்புக்கு மவுசு



கொழும்பு.ஜன.5

நாட்டில் எரிவாயுத் தட்டுப்பாடு மற்றும் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், களிமண் அடுப்புக்கள் மற்றும் பானைகளுக்கு சந்தையில் மவுசு அதிகரித்துள்ளது. இதனால் மட்பாண்டத் தொழிற்றுறை வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள், களிமண் அடுப்புகளை மொத்தமாகக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அதேவேளை கடந்த காலங்களில் எரிவாயு அடுப்புக்குப் பலர் மாறியதால், களிமண் அடுப்புகள் மற்றும் பானைகளின் தேவை சடுதியாகக் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-இ)

## டெங்கு ஒழிப்புத் திட்டம் மன்னாரில் நடைமுறை



மன்னார்.ஜன.5

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளன.

வீடுகள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழல்களை அடையாளப்படுத்தல், அவற்றை அப்புறப்படுத்துதல் மற்றும் வீடுகளுக்கு நேரடியாகச்சென்று சோதனை செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, மன்னார் பிராந்திய சுகாதாரப் பணிமனை மற்றும் மருத்துவமனைப் பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகள் இராணுவத்தினரின் உதவியுடன் சுத்தமாக்கப்பட்டன.(ஒ-4-213)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம்.ஜன.5

சுகாதாரத் தொழிலாளிமீது தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து, வலிகாமம் தெற்கு பிரதேசசபை ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இணுவில் ஆரம்பப் பாடசாலை முன்பாக, பிரதேசசபையின் அனுமதி பெறாது, நடைபாதை வியாபாரம் மேற்கொள்ளப்படுகின்றது. மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவரை, அங்கிருந்து அப்புறப்படுத்த முற்பட்டபோது, குறித்த வியாபாரியால் வருமானவரிப் பரிசோதகர், சுகாதாரப் பரிசோதகர் அச்சுறுத்தப்பட்டனர். அத்துடன் பிரதேசசபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தவிசாளரால் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, குறித்த நபர் கைது செய்யப்பட்டார். எனினும் குறித்த பகுதியில் தொடர்ந்தும் வியாபாரம் இடம்பெறுகின்றது என்று ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-26)

## ஐயப்ப பக்தர்கள் இருவருக்கு கொரோனா

சாவகச்சேரி.ஜன.5

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள சபரிமலைக்கு யாத்திரை செல்வதற்காக இரு பக்தர்களும் யாழ்.போதனா மருத்துவமனையில் அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டனர். இதன் போது அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து பிரதேசத்தில் கடந்த 4 தினங்களில் தொற்றால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது. (ஒ-4-9)

## ஞானச்சுடர் வெளியானது!

யாழ்ப்பாணம், ஜன.5

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் நூலின் 285 ஆவது மலர் வெளியாகியுள்ளது. (ஒ-ரி1)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.5

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் மனிதவள முகாமைத்துவம், சுற்றுலாவும் விடுதி முகாமைத்துவமும் மற்றும் கணினி அடிப்படைக் கல்வி ஆகிய குறுகியகால கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே இந்தக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி1)

## தென்மராட்சியில் இருவருக்கு டெங்கு

சாவகச்சேரி.ஜன.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் இருவருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. சங்கத்தானை மற்றும் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த இருவர், சிகிச்சை பெறச்சென்ற போது, டெங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரதேசத்தில் டெங்கால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும், பொலிஸார் மற்றும் பிரதேச செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் விசேட டெங்குப் பரிசோதனைகளை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். பரிசோதனையின் போது காணிகள் மற்றும் குடியிருப்புகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர் ஏந்துப் பொருள்களில் குடம்பிகள் காணப்படின், குடியிருப்பாளர் அல்லது பராமரிப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகனின் ஓய்வூதியத்தை அனுபவித்த மாமியார்

கொழும்பு,ஜன.5

உயிரிழந்த மருமகனின் ஓய்வூதியத்தை 10 வருடங்களாகப் பெற்றுவந்த மாமியார் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

சட்டவிரோதமாக இந்தப் பணத்தைப் பெற்ற மாமியார் மற்றும் அவருக்கு உதவிய கிராம அலுவலர் ஆகியோரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்ட தெஹிவளை பிரதேச செயலர் மற்றும் கணக்காளர் உட்படப் பலர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தெஹிவளை பிரதேச செயலருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக, அந்தப் பிரதேச செயலக கணக்காளர் தலைமையில் விசாரணைக் குழு விசாரணைகளை ஆரம்பித்தது. எனினும் விசாரணைகளின் பின்னர் கிராம அலுவலருக்கும் தெரியாமலேயே இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று கணக்காளர் அறிக்கையிட்டுள்ளார். இதுதொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, பிரதேச செயலர், கணக்காளர் ஆகியோரும் இதற்கு உடந்தையாக இருந்து உள்ளனர் என்ற கோணத்தில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (ஓ-4-இ)

பரந்தன் படுகொலை

# இறந்தவரின் சடலத்துடன் பொதுமக்கள் போராட்டம்

## பொலிஸார் மீது சரமாரிக் குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, ஜன. 5**

**கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் கடந்த முதலாம் திகதி இரவு படுகொலை செய்யப்பட்ட இளைஞரின் சடலத்துடன், பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த கொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். இனி இவ்வாறான சம்பவங்கள் நிகழாத வண்ணம் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.**



கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் கடந்த முதலாம்திகதி இரவு இடம்பெற்ற தாக்குதலில் கார்த்திக் (வயது - 24) என்ற இளைஞன் உயிரிழந்தார். இன்னொருவர் படுகாயமடைந்தார். படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் உயிரிழந்தநபரின் இறுதிச்சடங்குகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே இறந்தவரின் சடலத்துடன் பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-113)

உலகில்

# சிறந்த சுற்றுலாத்தலங்களில் இலங்கையும் உள்ளடக்கம்

கொழும்பு,ஜன.5

2022 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த 20 சுற்றுலாத்தலங்களில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சி.என்.என். ரவல், சுற்றுலா நாடுகளுக்கான பட்டியலில் இலங்கை இடம்பிடித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குப்பின்னர், உலக நாடுகளை மீண்டும் திறக்கும் போது, இந்தச் சுற்றுலாத்தலங்களைக் கட்டாயம் பார்க்கவேண்டும் என்ற அடிப்படையில் 20 நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஆண்டிகுவா மற்றும் பார்புடாவைத் தளமாகக் கொண்ட மேற்கிந்தியத் தீவுகள், லத்தீன் அமெரிக்க நாடான சிலி, பிரான்ஸ், கிரீன்லாந்து, பின்லாந்து, இத்தாலி மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையின் கவர்ச்சிகரமான கடற்கரைகள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுவையான உணவுகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஓ-4-இ)

# அடிக்கல் நடும் நிகழ்வு

சாவகச்சேரி, ஜன.5

பிரதேசசபை உறுப்பினரான சிவகுமார் கஜேனின் ஞாபகார்த்தமாக, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக பஸ்தரிப்பு நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு ,நேற்று முன்தினம் திங்கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன், பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு, அடிக்கல் நட்டனர். (ஓ-ரி1-159)





# பாடசாலையை வீழ்ந்து வணங்கிய புதிய அதிபர்

முல்லைத்தீவு,ஜன.5

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பொறுப்பேற்ற சின்னப்பா நாகேந்திரராசா, பாடசாலையை தலைதாழ்த்தி வீழ்ந்து வணங்கிய சம்பவம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

தான் கல்விகற்ற பாடசாலையைப் பொறுப்பேற்பதற்காக வந்திருந்த அதிபர் பாடசாலையின் கட்ட வாயிலில் தலைதாழ்த்தி வீழ்ந்து வணங்கினார்.இவர் தண்டுவான் அ.த.க.பாடசாலை, கற்சிலைமடு பண்டாரவன்னியன் ம.வி. முத்துஐயன்கட்டு வலதுகரை ம.வி உள்ளிட்ட பாடசாலைகளின் அதிபராகவும் கடமையாற்றியிருந்தார் . (ஓ-4-13)

# கலாசாரத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

யாழ்ப்பாணம்.ஜன.5



வடக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

வசாவிளான் மத்திய கல்லூரியின் பழைய மாணவியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைத்துறைப் பட்டதாரியுமான இவர், இலங்கை நிர்வாக சேவைக்குத்தெரிவாகி, இறுதியாக, வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் மாகாண உதவிக் காணி ஆணையாளராகக் கடமையாற்றினார். (ஓ-4-27)

# அரச நிறுவனங்களால் ரூ.53 பில்லியன் சேமிப்பு

கொழும்பு,ஜன.5

அரச நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட செலவுக் குறைப்பால், 53 பில்லியன் ரூபா நிதி சேமிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பல்வேறு தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்திய போதிலும், நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் நாம் பொருளாதாரத்தை வலுப்படுத்தியுள்ளோம்.

ஊழல், மோசடி, வீண் விரயத்தைத் தவிர்த்து நிதியைச் சேமித்துள்ளோம்.

அரச நிறுவனங்களிடம் செலவுகளைக் குறைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, கடந்த 6 மாதங்களில் மட்டும் 53 பில்லியன் ரூபா நிதி, திறைசேரிக்கு சேமித்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

செலவுகளைக் கட்டுப்படுத்தி, உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும் - என்றார். (ஓ-4-இ)

இலங்கைக்கு உதவும்

# நாடுகளுடன் பேச்சுநடத்த அமைச்சர்கள் நியமனம்!

கொழும்பு, ஜன. 5

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து, கலந்துரையாடி தீர்வுகளை வழங்குவதற்கு நிதியளிக்கும் ஒவ்வொரு நாட்டுடனும் பேச்சு நடத்த அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீண்டுவருவதற்கு பிற நாடுகளின் உதவியை இலங்கை தொடர்ச்சியாக நாடி வருகின்றது. இந்த நிலையில், இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளுடன் பேச்சு நடத்துவதற்கு அமைச்சர்கள் சிலர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டணிக்கு இடமில்லை!

## ஜே.வி.பி. திட்டவட்டம்




**கொழும்பு, ஜன. 5**

**பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம்-என்று ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரு மான கே.டி.லால்காந்த தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதான கட்சிகள் எனக் கூறிக்கொள் ளும் தரப்புகள் மக்களின் நம்பிக் கையை முழுமையாக இழந்துள் ளன. இதனால் தேசிய மக்கள் சக் தியை நோக்கி மக்கள் அணிதிரண்டு வருகின்றனர். மக்கள் நம்பிக்கையை இழந்துள்ள மற்றும் அரசிலிருந்து வெளியேறவுள்ள அணிகளை நாம் இணைத்துக்கொள்ளமாட்டோம். அவர்களை மக்கள் வெறுக்கின்ற னர். அதனால்தான் எம்மை நோக்கி வருகின்றனர். மக்கள் விரும்பா ததை நாம் செய்யமாட்டோம். குறித்த கட்சிகளிலுள்ள முற்போக்குச் சிந்த னையாளர்கள் எம்முடன் இணைய லாம். அதற்கான அழைப்பை விடுக் கின்றோம்- என்றார். (ம-4-44)




## சிறுவர்பூங்கா கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஜன.5

ஆனைக்கோட்டை, கூழாவடியில் சிறுவர் பூங்காவுக்கான நவீன மாடிக்கட்டடத்துக்கு கடந்த சனிக்கிழமை அடிக்கல் நடப்பட்டது.

உலகவங்கியின் எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் கீழ், வலி.தென்மேற்கு சிறுவர்கள் மட்டுமன்றி, யாழ். மாவட்ட சிறுவர்களும் பயனடையக் கூடியதாக, சிறுவர் விளையாட்டுப் பூங்கா மற்றும் நவீன வசதிகளைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடம் என்பன அமைக்கப்படவுள் ளன.

கட்டடத்துக்கான அடிக்கல்லை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மு.சுலோசனா நட்டார். ஒரு கோடி 26 லட்சம் ரூபா செலவில் சிறுவர் பூங்காவுக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எல்.டி.எஸ்.பி. திட்டத்தின் கீழ் 11 மில்லியன் ரூபா செலவில் நவீன தரம் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் இன்னும் மூன்று மாதங்களில் அமைக்கப்படும் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர்



## வெளியானது லீலா பஞ்சாங்க கலண்டர்

கொழும்பு,ஜன.5

70 வருடங்களுக்கு மேலாக இரு மொழி களிலும்,இரு நிறங்க ளி லும் அச்சடிக்கப் பட்டு வரும் 2022 ஆம் ஆண்டுக்கான லீலா பஞ்சாங்க சித்தி ரக் கலண்டர் வெளிவந் துள்ளது.

பாடசாலை மாணவர் களுக்கான பொது அறிவு, முதுபெரும் அறி ஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரின் விவரங் கள் கலண்டர் ஏடு களில் உள்ளடக்கப்பட் டுள்ளன.

இதனை லீலா பிரஸ் பிரைவேட் லிமிட்டெட் 483 1/1 கே.சி.சிறில் சி பெரேரா மாவத்தை, கொழும்பு 13 என்ற முக வரியில்பெற்றுக்கொள்ள முடியும். (ஒ-4,இ)

## திட்டமிடப்படாத வீதிப் புனரமைப்பு

### வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தெல்லிப்பழை பிரதானவீதியில் இருந்து சங்கானை செல்லும் டச்சுவீதி புனரமைப் பின்போது, சிலர் தெரிவித்த எதிர்ப்பின் காரணமாக, மேம்பாலமாக வரவேண்டிய பாதை கொங்கிறீற் பாதையாக மாற்றப் பட்டுள்ளது.

இதனால் மழைகாலத்தில் அந்த வீதி யின் ஊடாக எவரும் பயணிக்க முடியா துள்ளது. மாற்றுப் பாதையாக சித்தங் கேணிச் சந்தியூடாகவே சங்கானைக்குப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள் ளது.

ஏற்கனவே சித்தன்கேணிச்சந்தியில் விபத் துக்கள் ஏற்படுகின்றன. டச்சுவீதியில் வெள் ளம் ஏற்பட்டு வட்டுக்கோட்டை, சங்கரத்தை, துணைவி, அராலி, மூளாய், கோட்டைக் காடு ஆகிய பிரதேசங்களின் மக்களும், சித்தன்கேணி ஊடாக பயணம் மேற்கொள் வதால் சிரமங்களை எதிர்கொள்ளவேண் டியுள்ளது.

டச்சுவீதியூடாக பயணத்தை மேற்கொள் வோர் சித்தன்கேணிச் சந்திக்குவராது வேறு பாதையூடாக சங்கானைக்குப் பய ணம் மேற்கொள்ள முடியாது.

மேலும் வட்டுக்கோட்டை, மூளாய் வீதி திருத் தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியில் மதுபானச்சாலை, கள்ளுத் தவறணை ஆகியவற்றுக்கு நடுவே ஒரு தண்ணீர் ஓடும் பாதை இருக்கின்றது. அந்தப் பாதைக்குக் கட்டாயம் மேம்பாலம் அமைக்கவேண்டும் என்று வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.ஸ்ரீஜீவா சுட் டிக்காட்டியுள்ளார். (ஒ-4)

## மீனவர்களுக்கு போட்டிகள்

கிளிநொச்சி, ஜன.5

அக்கராயன்குளம் நன்னீர் மீன்பிடி மீனவர்க ளின் ஏற்பாட்டில், மீனவர்களுக்கிடையி லான படகுப்போட்டி மற்றும் நீச்சல்போட்டி கடந்த சனிக்கிழமை அக்கராயன்குளத்தில் இடம்பெற்றன.

புதுவருடத்தைச் சிறப்பிக்கும் வகையில் குறித்த போட்டிகள் நடத்தப்பட்டு, போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் வழங் கப்பட்டன. (ஒ-ரி1-113)



யாழ்.விருது பெற்ற சுன்னாகம் வாழ்வகத்தின் தலைவரும், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ரவீந்திரனுக்கு, பாராட்டு விழா அண்மையில் சுன்னாகம் வாழ்வகத்தில் இடம்பெற்றது. (ஒ-ரி1,159)



## சனசமூக நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

பிரான்பற்று சரஸ்வதி சனசமூகநிலையம் நவீன வடிவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு, அண்மை யில் திறந்து வைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சிவபுவனேந்திரராஜா ஜெயக்குமாரின் நிதிப்பங்களிப்பில் இந்த நிலையம் புனரமைத்துக் கொடுக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் அ.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் சீவரட்ணம் சபே சன், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி அதிகாரி தா.அருந்தசா உட்படப் பலர் கலந்துகொண்டு மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட சனசமூக நிலையக் கட் டடத்தைத் திறந்து வைத்தனர். (ஒ-ரி1-50)

## வாடிக்கையாளர்களுக்கு வாகனத் தரிப்பிடமில்லை

யாழ்ப்பாணம்,ஜன.5

வடமாகாணப் பிராந்திய மின்சாரசபை காரியா லயத்தில், வாடிக்கையாளர்களுக்கு வாகனத் தரிப்பிடம் அமைக்கப்படாதுள்ளதால், சிரமங் களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அங்கு வாகனத் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ள போதும், மின்சாரசபையின் ஊழியர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுகின்றது. இதனால் வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை வீதி யில் வெயிலிலும், மழையிலும் நிறுத்திவிட்டுச் செல்லவேண்டியுள்ளது. (ஒ-4-125)

## நால்வருக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு,ஜன.5

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் பகுதி யில் இருந்து, மோட்டார் சைக்கிள் ஊடாக கஞ்சா வைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடற்படையினரின் தகவலுக்கு அமைவாக, சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது, 89 கிலோ கஞ்சாவுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் புதுக்குடி யிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்தி [illegible] 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தர விடப்பட்டது. (ஒ-4-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சலுகை அரசியல்

கடந்த ஆண்டு வரவு – செலவுத்திட்டம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் முன்வைக்கப்பட்டது. மக்கள் எதிர்பார்த்த விலைக்குறைப்பு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட எதையும் அந்த வரவு – செலவுத் திட்டம் வழங்கியிருக்கவில்லை. பஸில் ராஜபக்ச நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்த அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு மற்றும் வரி விலக்களிப்புக்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரு வரவு – செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்படும் விடயங்கள் போன்றே இருந்தது.

தற்போதைய வாழ்க்கைச்செலவு மலைபோன்று உயர்ந்திருக்கின்றது. அரசின் கொடுப்பனவு எல்லாம் மடு போன்று உள்ளது. அரசு பொருளாதார மீட்சி இல்லாத சூழலில், ஏற்கனவே பண வீக்கம் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறானதொரு சலுகைகளை அதிரடியாக அறிவித்திருக்கின்றது.

இலங்கை அரசு இந்த அதிகரிப்புக்களுக்குரிய பணத்தைத் தாராளமாக அச்சிடலாம். ஏற்கனவே அவ்வாறு அச்சிடுவதால்தான் பண வீக்கம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. தெற்காசியாவிலேயே பண வீக்கத்தில் முதலிடத்தில் உள்ளநாடு என்ற நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுவிட்டது. இப்போதும் பணத்தை அச்சிட்டால் மேலும்மேலும் பண வீக்கம் அதிகரிக்க அதிகரிக்க நாடு மீளமுடியாத சகதிக்குள்ளேயே வீழும்.

ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக இலங்கை மக்களின் மனோநிலை மாற்றம் பெற்றிருக்கின்றது. போர் வெற்றி வீரர்கள் என்ற பிம்பம் உடைத்தெறியப்பட்டு உலகில் கடைந்தெடுத்த மோசமான ஆட்சியாளர்கள் என்ற பெயரைப் பெற்றிருக்கின்றார்கள். தங்களுக்கு எதிரான மனோநிலையை தகர்த்தெறிவதற்கு அவர்கள் பிரயோகிக்கும் உத்தியா இந்தச் சலுகைகள்? என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

இப்போது அறிவித்துள்ள சலுகைகளால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் மேலும் அதிகரிக்கப்போகின்றது. எதிரணிகள் உட்பட பொருளாதார நிபுணர்கள் கூறுவதைப்போன்று, இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதுதான் வழியாக இருக்கும். ஆனால், இந்த அரசு இப்போது போகமாட்டேன் என்று அடம்பிடிப்பதைப்போன்று எதிர்காலத்தில் எழும் நெருக்கடியை நாணய நிதியத்தை நாடாமல் எதிர்கொள்ளமுடியாது.


சர்வதேச நாணய நிதியத்தை நாடினால், நாட்டின் பொருளாதார மீளெழுச்சிக்கான நிதிஉதவி மாத்திரமின்றி சில நிபந்தனைகளையும் அது விதிக்கும். நாட்டில் வழங்கப்படும் நிவாரணங்கள், சலுகைகள், உதவிகளைக் குறைக்கச்சொல்வது அல்லது இல்லாமற் செய்வது, வரி விலக்களிப்புக்களை இல்லாமற் செய்வது அல்லது குறைக்கச்சொல்வது என்று பல்வேறு வகையான பொருளாதார ரீதியான நிபந்தனைகள் இலங்கைக்கு விதிக்கப்படும்.

அப்போது அரசு அறிவித்த இந்தச் சலுகைகள் எல்லாவற்றையும் வழங்க முடியாத நிலைமை ஏற்படும். ராஜபக்சக்கள் தங்கள் வழமையான உசுப்பேத்தல் ஆயுதத்தைக் கையில் எடுப்பார்கள். நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடவில்லை. எதிரணியினர் கூறியதால் நாடினோம். அவர்கள் நிபந்தனை விதிக்கின்றார்கள். எம்மால் சலுகைகளை வழங்கமுடியாது. இதற்குக் காரணம் எதிரணி என்று மக்களை உசுப்பேத்துவார்கள்.

தங்கள் மீதான மக்களின் எதிர்ப்பு மனோநிலையை அப்படியே எதிரணி பக்கம் திருப்பிவிடுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நாட்டில் ஏதாவது ஒரு தேர்தல் நடக்கும். மீண்டும் ராஜபக்சக்கள் ஆட்சி[illegible] வைப்பார்கள். இதற்கான முன்னோடியாகவே இப்போதைய அரசின் சலுகைகள் இருக்கக்கூடும்.

## நாளொரு நல்வார்த்தை

"நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்துகொள்வது அவசியம்"
– அன்னை தெரேசா.



# மண்ணுக்குரிய பெருமையுடன் பட்டத் திருவிழாவை நடத்துக!

## வலியுறுத்துகிறார் சார்ள்ஸ் எம்.பி.

**மன்னார், ஜன.5**

**தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறையில் நடக்கவுள்ள பட்டத் திருவிழா, தமிழின இனப்படுகொலை புரிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.**



இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

இந்தப் பட்டத்திருவிழா வல்வெட்டித்துறை மண்ணுக்குரிய பெருமையுடன் நடைபெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. நீண்ட இனவழிப்பை நடத்தியும், தமிழர்களது பூர்வீக நிலங்களை முறையற்ற விதத்தில் பறித்தும், கொடூர ஆட்சி நடத்தும் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்களின் பிரசன்னத்துடன் இந்தப் பட்டத் திருவிழா நடத்தப்படுவது வல்வெட்டித்துறை மண்ணுக்கும், மக்களுக்கும் செய்யும் துரோகம். அடுத்தமாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எழுத்துமூல அறிக்கையை அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டிய நிலையில், ராஜபக்ச குடும்பத்தினரை பிரதம விருந்தினர்களாக அழைத்து இந்தப் பட்டத் திருவிழாவை நடத்துவது அரசாங்கத்தின் இராஜதந்திர நடவடிக்கையே - என்றுள்ளது. (எ-இ)

# ஜனாதிபதியை விமர்சிப்பது ஜனநாயகத்துக்கு ஏற்றதே!

## சட்டத்தரணி வெரகொட தெரிவிப்பு

அரச உயர் அதிகாரிகளை குறிப்பாக ஜனாதிபதியை அவதூறு செய்த குற்றச்சாட்டின்கீழ் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதியை விமர்சிப்பதெல்லாம் ஜனநாயக ஆட்சியின் வெளிப்பாடுதான் என்று தெரிவித்தார் சட்டத்தரணி திஷ்ய வெரகொட.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, ஜனாதிபதியைக் கேலி செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் எனத் தெரிவித்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ஜனநாயக நாட்டில் கேலிசெய்வது, கிண்டல் செய்வது, அரசியல்வாதிகளை நகைச்சுவையாக்குவது அல்லது பொது விமர்சனத்துக்கு உட்படுத்துவது ஏற்கத்தக்கது.

சர்வாதிகாரம் அல்லது போலி ஜனநாயக ஆட்சிகளில் மட்டுமே அரச தலைவரையோ அல்லது பிற செல்வாக்கு மிக்க அரசியல் வாதிகளையோ கேலி செய்யும் வகையில் நடந்துகொண்டால், மக்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் பார்க்கிறோம்.

அரசியல்வாதிகளை விமர்சனம் செய்யக்கூடாது என்பதற்காக, பொதுமக்களுக்கு எதிராகப் பொலிஸாரைப் பயன்படுத்தக்கூடாது - என்றார். (ம)

06.01.2022
வியாழக்கிழமை
மார்கழி 22

சுபநேரம் : மு.ப. 08.01 –மு.ப. 09.31
ராகுகாலம் : பி.ப.02.01–பி.ப.03.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவுக் கடலில் இந்திய இழுவைப்படகுகள்

## உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு

**முல்லைத்தீவு,ஜன.5**
**முல்லைத்தீவுக் கடலில் இந்திய இழுவைப்படகுகளின் ஆக்கிரமிப்பு மீளவும் ஆரம்பித்துள்ளதால், உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

ஒரேநாளில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இந்திய இழுவைப் படகுகள், முல்லைத்தீவு சாலை தொடக்கம் நாயாறுவரையான கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டன. இதனால் எமது கடல்வளங்கள் அழிக்கப்படுகின்றன. எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும், எவரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்று மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-4,19)

# ரயில் மோதி மாடு சாவு

யாழ்ப்பாணம்,ஜன.5
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் மாடு ஒன்று இறந்துள்ளது.
இந்தச் சம்பவம் மீசாலை வடக்கு இராமாவில் கந்த சுவாமி கோவிலுக்கு அருகாமையிலுள்ள தண்டவாளப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
சாவகச்சேரி பிரதேசசபை ஊழியர்கள் இறந்த மாட்டை அவ்விடத்தில் இருந்து அகற்றினர். (ஒ-4.159)



# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி கட்டாயம்

யாழ்ப்பாணம்,ஜன.5
யாழ்.மாவட்டத்தில் அனைத்து வளர்ப்பு நாய்களையும்,அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் பதிவு செய்து, தடுப்பூசி ஏற்றுவதுடன், உரிமத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.
இது தொடர்பில் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
கால்நடை மருத்துவ அதிகாரி பணியகத்துடன் இணைந்து தடுப்பூசி வழங்கப்படும். நாய்களுக்கு இந்த வருடத்துக்கான உரிமம் வழங்கப்படல் வேண்டும்.
கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு, பெண் நாய்களுக்குக் கருத்தடைச் சிகிச்சை மேற்கொள்ளவேண்டும்.
அத்துடன் அலைந்து திரியும் கால்நடைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும்வரை உள்ளூராட்சி மன்றங்களால் பட்டியில் அடைத்து உரிய முறையில் பராமரிக்கப்படல் வேண்டும். மேலும் உரிமை கோரப்படாத கால்நடைகளை, உரிய நடைமுறைகளுக்கு அமைவாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-4,9)

# குளத்தை மேவி வீதிக்கு வெள்ளம்

## போக்குவரத்து சிரமம்

யாழ்ப்பாணம்,ஜன.5
கொடிகாமம், கோயிலாமனை சிவன்கோவில் வீதியில் அமைந்துள்ள சவாரிக்குளம், மழை காலத்தில் வெள்ளம் நிரம்பி வீதியை மேவிப் பாய்கின்றது. இதனால் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மந்துவில், தாவளை, இயற்றாலை, மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து சந்தை, பாடசாலை மற்றும்தொழில்புரியும் இடங்களுக்குச் செல்லும் மக்கள் வெள்ளத்தால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே உரிய அதிகாரிகள், உரிய திட்டமிடல்மூலம் குளத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ஒ-4,159)

# நம்பிக்கைகளை சிதைத்தால் முரண்பாடுகளே தோன்றும்

## இந்து இளைஞர் பேரவை வலியுறுத்து

வவுனியா, ஜன.5
அவரவர் சமயம்சார் நம்பிக்கைகளைச் சிதைக்க முற்படும்போது, முரண்பாடுகளே தோன்றும். அதனைத் தடுக்க வேண்டுமானால், சமயம்சார் அமைப்புகள் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்புக்களைத் தெரிவிக்கவேண்டும்.
இவ்வாறு சர்வதேச இந்து இளைஞர் பேரவை வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் பேரவைத் தலைவரும், வவுனியா ஆதி விநாயகர் ஆலய பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவிக்கையில்,
அண்மைக்காலமாக இந்துக்கடவுள் விக்கிரகங்கள் களவாடப்படுவதும், கடத்தப்படுவதும் அதிகரித்துள்ளன. மத வழிபாடு சார்ந்தவைகள் கொச்சைப்படுத்தப்படும்போது அல்லது ஆக்கிரமிப்பு, அழிப்புக்குள்ளாகும் போது சமயம் சார் அமைப்புகள் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்புகளைத் தெரிவிக்க வேண்டும். தட்டிக்கேட்க வேண்டியவர்கள் கண்மூடிக்கொண்டு இருப்பதால், எந்தப்பயனும் இல்லை. மனமாற்றம்வரும் வரைக்கும் எத்தனை மதங்கள் மாறியும் பயன் இல்லை- என்றார். (ஒ-4,110)



# கூ.சங்கக் கிளை திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஜன. 5
தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுதுமட்டுவாழ் கிளை இல 14, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கூட்டுறவு நகராக மாற்றம் பெற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் 5 லட்சம் ரூபா நிதிப் பங்களிப்பு மற்றும் சங்கத்தின் பங்களிப்புடன் இந்த புதிய கூட்டுறவுக்கிளை திறந்து வைக்கப்பட்டது. (ஒ-ரி1-159)

# மூதாட்டி கொலை; தம்பதிக்கு மறியல்

கிளிநொச்சி,ஜன.5
கிளிநொச்சி, அம்பாள்குளம் முதலைப்பாலத்தின் கீழ், மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதான தம்பதியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
வெளிநாட்டில் இருந்து திரும்பிய மூதாட்டி, வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
இதனையடுத்து அவரது வீட்டுக்கு அருகில் வசித்த தம்பதியர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், மூதாட்டி கொலை செய்யப்பட்டு, முதலைப் பாலத்துக்குக்கீழ் போட்டமை தெரியவந்தது.
இதனையடுத்து கைது செய்யப்பட்ட இளம் தம்பதியர் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-4,19)



# யாருக்கு சொந்தமான வீதி? இழுபறியில் புனரமைப்பு

முல்லைத்தீவு,ஜன.5
துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச சபைகளின் எல்லையில் வீதி அமைந்திருப்பதால், அதனை யார் புனரமைப்பது என்ற இழுபறி நீடிக்கின்றது.
முல்லைத்தீவு, மல்லாவி அனிஞ்சியன் குளம் பகுதியில் இரு பிரதேசசபைகளின் எல்லையில் காணப்படும் குறித்த வீதியை திருத்தம் செய்வதில், இரு பிரதேசசபைகளும் இழுத்தடிப்புச் செய்கின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
இரு பிரதேச சபைகளுக்கும் முறையிட்டும், இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.
இந்த வீதியை, சுமார் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. சுமார் இரண்டரைக் கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியே செப்பனிடப்பட வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4,19)

# ஓராண்டு நிறைவும் விருது வழங்கலும்

யாழ்ப்பாணம்,ஜன.5
EDUS நிறுவனத்தின் ஓராண்டு நிறைவு விழாவும் , விருது வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.
நிறுவனத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, நிறுவனத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விருது வழங்கலும், இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றன. edus.lk எனும் இணையத்தளம் மூலம், சிறப்புக் கற்கை நெறிகள் நடத்தப்படுகின்றன.



நிகழ்வில் யாழ்.போதனா மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, மங்களா காட்சியறை உரிமையாளரான கே.ஜெயந்தன் ஆகியோரும், சிறப்புப் பேச்சாளராக யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் எஸ். வினோதக்குமாரும் கலந்துகொண்டனர். (ஒ-4.10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 2022

# ஆங்கிலப் புத்தாண்டுப் பலன்கள்




## தனுசு

கடந்த ஐந்து ஆண்டுகளாகவே ஏழரைச் சனியின் தாக்கத்தால் தடுமாறிக்கொண்டிருக்கும் தனுசு ராசி அன்பர்களே!

உங்களுக்கு இந்த 2022ஆம் ஆண்டு பல வகையிலும் ஆறுதல் தரும் ஆண்டாக அமையப் போகிறது. இந்த ஆண்டு பிறக்கும்போது புத பகவான் சாதகமான ராசிகளில் சஞ்சரிக்கிறார். இதனால் முக்கியமான பிரமுகர்களின் நட்பும் அறி முகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். பழைய சொத்தை எதிர்பார்த்த விலைக்கு விற்றுப் புதிய சொத்து வாங்குவீர்கள். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். சொந்த ஊரில் மதிப்பு மரியாதை கூடும். சுக்கிரன் உங்களுக்கு சாதகமாக இருப்பதால் பண வரவு அதிகரிக்கும். நவீன எலக்ட்ரோனிக்ஸ் சாத னங்கள் வாங்குவீர்கள். தங்க ஆபரணம், விலையுயர்ந்த ஆடை வாங்குவீர்கள். தடைப்பட்ட வீடு கட்டும் பணியைத் தொடங்க வங்கி கடன் கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ராசிக்கு 12ஆம் வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் செலவுகள் உங்களைத் துரத்தும். காலில் சக்கரம் கட்டினாற் போல பயணங்களும் அலைச்சல்களும் அடுத்த டுத்து இருக்கும்.

குருபகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் 13.4. 2022 வரை சஞ்சாரம் செய்யவிருக்கிறார். இதனால் புதிய முயற்சிகள் சிறு இழுபறிக்குப்பின் முடியும். பணிச்சுமையும் கடுமையாக இருக்கும். ஆனால் 14.4.2022 முதல் வருடம் முடியும் வரை 4ஆம் வீட்டில் குருபகவான் அமர்ந்து பலன் தரவிருப்பதால் அது வரை இழுபறியாக இருந்த பல காரியங்களெல்லாம் வெற்றிகரமாக முடிவடையும். குடும்பத்தி னர் மற்றும் உறவினர்களின் ஆரோக்கியம் மேம் படும். மனவருத்தங்கள் நீங்கும். எதைச் செய்தாலும் சட்டப்படியே செய்யுங்கள்.

கேது உங்கள் ராசிக்கு 12இல் 20.3. 2022 வரை சஞ்சாரம் செய்வதால் நீண்ட நாள்களாகப் போக நினைத்த குலதெய்வக்கோயிலுக்குச் சென்று வருவீர்கள். தூக்கம் குறையும். அதேவேளை ராகு 6ஆம் வீடான ரிஷபத்தில் நிற்பதால் மறைமுக எதிரிகளால் ஆதாயம் ஏற்படும். சொந்த பந்தங்கள் மதிக்கும்படி நடந்துகொள்வீர்கள். விழாக்களில் உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். நண்பர்கள் உதவுவார்கள்.

21.3.2022 முதல் வருடம் முடியும் வரை கேது லாப வீட்டில் அமர்வதால் செல்வாக்குக் கூடும். கௌரவப் பதவிகள் தேடிவரும். பங்கு மூலம் பணம் வரும். ஆனால், ராகு 5ஆம் வீட்டில் நிற்பதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் இருக்கும். மகளின் திருமணத்துக்காக வெளியில் கடன் வாங்க வேண்டி வரும்.

சனிபகவான் ராசிக்கு 2ஆம் வீடான மகரத்தில் அமர்ந்து ஆட்சிபலம்பெற்று பாதகச் சனியாகத் தொடர்வதால் வீண் வாக்குவாதங்களையெல்லாம் தவிர்க்கப் பாருங்கள்.

எனவே ஆரோக்கியத்தில் உரிய அக்கறை எடுத் துக்கொள்ளுங்கள். யாரையும் மட்டப்படுத்திப் பேசுவதை விட்டு விடுங்கள்.

அலுவலகச் சூழல் மிகவும் சாதகமாகும். உங்களை நம்பி முக்கியப் பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டின் தொடக்கம் உங்களைச் சிரமப்படுத்தினாலும் மையப்பகுதியும், இறுதிப்பகுதியும் சாதிக்க வைப்பதாக அமையும்.

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இந்திராணி கதிர்காமத்தம்பி

**திதி : மார்கழி வளர்பிறை திருதியை (05.01.2022)**

அன்பின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
எங்களுடனே வாழ்ந்திருந்தீர்
ஆதரவு காட்டி அரவணைத்த தெய்வமே!
இன்று உங்களை நினைவு கூருகின்றோம்
சிரித்த முகமும் காந்தக் கண்களும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவே அகலாது!
எப்போதும் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்களை நாம் மறக்கமுடியாது தவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அம்மன் கோவில் வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

(cs.34201812.6)

# இருவேறு ஆண்டுகளில் பிறந்த இரட்டையர்கள்

கலிபோர்னியா, ஜன.5

அமெரிக்கா, கலிபோர்னியா மாகாணத்தைச் சேர்ந்த தம்பதியருக்கு பிறந்த இரட்டைக் குழந்தைகள் 15 நிமிட இடைவெளியில் இருவேறு ஆண்டுகளில் பிறந்துள்ளனர். கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி 11.45 மணிக்கு ஒரு குழந்தையும் அடுத்த 15 நிமிடங்களில் 2022ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி இன்னொரு குழந்தையும் என இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன.

இதனால் இரட்டைக் குழந்தைகளாக இருந்தாலும் இருவருக்கும் வெவ்வேறு நாள்களில்தான் பிறந்தநாள்கள் வரப் போகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மேலதிகாரியின் கடுமை மெல்ல மெல்ல மாறும். குழப்பமான மனநிலை அகலுவதால் செயலில் தெளிவு வரும். கூடுதல் முயற்சி காரணமாக நன்மைகள் நிகழும். பாசமாக இருப்பர்.

**இடபம்:** மனதிடம் அதிகரிக்கும். செயலில் உத்வேகம் பிறக்கும். உங்களது செயலில் கனிவான தன்மை நிறைந்து இருக்கும் வெற்றி வரும். திடீர் வரவு உண்டு. பயம் நீங்கும்.

**மிதுனம்:** முன்யோசனையுடன் கவனமாக திட்டமிடுவது அவசியம். யாரைப் பற்றியும் எவரிடமும் குறைகூற வேண்டாம். வீட்டைப் புதுப்பித்து பயன் அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

**கடகம்:** புதிய தம்பதிக்கு குழந்தைப்பேறு உறுதியாகும். நண்பர்கள் இடையே முன்பைவிட ஒற்றுமை அதிகரிக்கும். நிலம், வீடு போன்றவற்றின் மூலம் வரவு உண்டு. புகழ் கூடும்.

**சிம்மம்:** புதிய நண்பர் கிடைப்பார். பணியிடத்தில் இருந்த குழப்பம் நீங்கும். சகபணியாளர்கள் இடையே நல்லுறவு ஏற்படுவதால் நிம்மதி வரும். பதவி உயர்வு கிடைக்கும்..

**கன்னி:** திறமையை வெளிப்படுத்தி மேலதிகாரியிடம் பாராட்டுப் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய உத்வேகத்துடன் பணியாற்றுவார்கள். செயற்பாடுகளில் உத்வேகம் அதிகரிக்கும்

**துலாம்:** வீடு, வாங்கும் திட்டம் நிறைவேறும். மகிழ்ச்சி கூடும். உங்களின் செயற்றிறன் அதிகரிக்கும். புதிய விஷயங்கள் கற்பீர்கள். பணியில் சிறப்பான முன்னேற்றத்தைக் காண வழிபிறக்கும்.

**விருச்சிகம்:** உங்களுக்கு உதவும் நண்பரை பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொழிலில் லாபம் பெற அதிகம் பாடுபட வேண்டியிருக்கும். உங்களது புதிய முயற்சிகளால் புகழ் அதிகரிக்கும்.

**தனுசு:** தேவையற்ற பயங்களால் நிம்மதி இழக்க வேண்டாம். யாரையும் கடுமையாகப் பேசவேண்டாம். அதுவே நல்லது. உங்களின் செயற்பாடு சாதாரணமாக மேன்மை அடைவீர்கள். மன உற்சாகம் பெருகும்.

**மகரம்:** பணியாளர்கள் ஓய்வில்லாமல் கூடுதலாக உழைப்பீர்கள். குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றம் சிறப்படையும். ஆடம்பரச் செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும்.

**கும்பம்:** குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கூடிவர வாய்ப்பு உண்டு. உறவினர்கள் பற்றி இருந்து வந்த மனவருத்தம் மறையும். கடன் வாங்குவதை முற்றிலுமாகத் தவிர்ப்பது நல்லது. பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத நபர் ஒருவர் மூலம் நன்மை அடைவீர்கள். அடுத்தவர்களின் தரம் அறிந்து மதிப்பளிப்பது நல்லது. தாயாருக்கு நன்மை ஏற்படும். வீடு வாங்கும் யோகம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார் பொன்னம்பலம்

## தமிழர்களின் உரிமைக்காக ஓங்கி ஒலித்த மாமனிதர்!



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22ஆவது நினைவு தினம் இன்றாகும். இன்றையநாளில் அவர் ஆற்றிய அரசியல், சமூகக் கடமைகள்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டியது காலத்தின் தேவையாகும். இலங்கை வாழ் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நலன்களில் அவருக்கிருந்த அர்ப்பணிப்பு முக்கியத்துவம் கொண்டதாக விளங்கியது. அரசியல் சதுரங்கத்தில் தாக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

### தமிழ் மக்களின் உரிமைக்குரல்

அரசியல் காரணங்களுக்காகப் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் சார்பாகவும், கிரிஷாந்திகொலை, கொக்கட்டிசோலைவரை இராணுவ அநியாயங்களுக்கு எதிராகவும் நீதிமன்றங்களில் வாதாடி வரலாறு படைத்தவர். உலகு எங்கனும் எந்த இடத்திலும், தமிழ் மக்களுக்குச் சார்பான கருத்துக்களைத் துணிவாக வெளியிட்டுவந்தார்.

இதன் உச்சக் கட்டமாக இனவாதிகளால் மாமனிதர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழர் தம் அடிப்படை அபிலாஷைகளை இடித்து வலியுறுத்தியவர் அவர்.

தமிழ் இயக்கங்கள் ஒன்றுபட்டு ஏற்றுக்கொண்ட 'திம்புக்கோட்பாடு'களையே தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளாக வலியுறுத்திக் கொண்டிருந்தார். எந்தவொரு சிங்களத் தலைமையும் வடக்கு - கிழக்கு எனும் தமிழர்தம் பூர்வீக நிலத்தையும், பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்வார்களானால் அரசியல் தீர்வைத்தர வல்லவர்களாவர் அன்றேல் இல்லை என்பது அவர்தம் நம்பிக்கை. ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளான சகவாழ்வு சாத்தியப்படுமென நம்பினார். அதுவே அவர் அடிப்படை அபிலாஷைகள் என்று வலியுறுத்தக் காரணமானது.

### சிறிமாவோவுடன் நட்புறவு

ஆனால் இந்திய ஈடுபாடு குறித்த அவரது நிலைப்பாடானது திருமதி பண்டாரநாயக்க மற்றும் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் என்போரின் நிலைப்பாடுகளுக்கு நெருங்கியதாக நகர்ந்தது. அபிலாஷைகளை அடியொற்றிய DPA Manifesto எனும் அரசியல் உடன்பாடு ஊடாக 1988 ஜனாதிபதித் தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை ஆதரிப்பதற்காக வடக்கின் இடதுசாரிக் கம்யூனிஸ்ட்டுக்கள் ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் இணைந்தபோது குமார் பெறுமதிமிக்க பங்களிப்பை ஆற்றினார். அது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடனான நட்புறவுக்குக் காரணமாயிற்று. சம்பிக்க ரணவக்கவும் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் சார்பாக இதில் கையொப்பமிட்டிருந்தார். அவரிடம் நேர்மையிருந்ததால் அரசியல் நேர்மையும் இருந்தது.


அவரது கடைசி வருடங்களின்போது அவர் காட்டிய மன வலிமையானது அதீதமானது. தலைவர் குமாரின் அரசியல் நிலைப்பாடானது ஏறுமாறானதாகவோ சந்தர்ப்பவாதப் போக்குடையதாகவோ இருக்கவில்லை. ஆனால், கொள்கை நிலை தமிழர் தம் அபிலாஷைகளை வலியுறுத்துவதாகவே இருந்தது. அவரது முயற்சிகளின் நம்பிக்கையின் தோல்வியானது குமாரின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வழிகோலிற்று. தமது அரசியல் இலட்சியங்களை எப்போதோ கைவிட்டுவிட்டு இலங்கை அரசாங்கத்துடன் தொங்கிக்கொண்டிருக்கும் சிறு துண்டுகளாக மாறிய தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்களின் நடத்தையின் பால் அவர் கவலைகொண்டிருந்தார்.

எனினும், 'கருத்து வேற்றுமைகள் வேறு, மனித அன்பும் மனிதப் பண்பும் வேறு' என்பதில் அவர் உறுதியாக இருந்தார். இறுதிக்காலம்வரை அனைத்து இயக்கங்களையும் வரவேற்று, தனது இல்லத்தில் விருந்தோம்பி ஒன்றுபடுத்தி பொதுக் கருத்துக்காகச் சந்திப்புக்களை ஏற்படுத்தனார். இதன் விளைவுதான் அவரின் பின்னாளில் பத்துப் பதினொரு கட்சிகளின் கூட்டமைப்பாக நாம் ஒன்றுபட்டு செயற்பட போராட்டம் நடத்த வழிவகுத்தது.

அதேவேளை தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குச் சார்பாக நின்ற ஒரேயொரு உண்மையான சக்தி விடுதலைப் புலிகள் என அவருக்குத் தென்பட்டது. அவர் அதனை வெளிப்படையாக பல்வேறு ஊடகங்களிலும் கூறி வந்திருக்கின்றார். அவர் இரத்தத்தையும் துன்பியலையும் பார்க்க விரும்பாதவர், அதனால் இந்த நிலைப்பாட்டுக்காகக் குமார் குரல் கொடுத்தார். ஒரு தமிழ்த் தேசியவாதி என்ற கோணத்திலிருந்து. பிரச்சினைக்கு நீதியானதும் நிலையானதுமான ஒரு தீர்வைக் காண்பது தொடர்பில் உள்ளொன்றும் புறமொன்றுமாக விளங்கும் குறுகிய எண்ணங் கொண்ட நாட்டுப்பற்றை வலியுறுத்தும் சக்திகளும் தேசிய அரசியல் கட்சிகளும்தான் சுயநிர்ணய கோரிக்கைக்குப் பெருமளவில் பாதக மேற்படுத்தியதாகக் கூறுவார்.

### சர்வதேச அங்கீகாரத்தை ஈர்த்துச் செயற்பட்டார்

குமார் வாழ்ந்தகாலம் மிகமிகக் கடினமான காலமாகும். இதுவரை ஆயுதம் ஏந்தாத எந்தவொரு தமிழ் அரசியல் வாதியையும்விட அதிக பிரச்சினைக்கு தனது எதிர்நீச்சலை, ஆபத்தை ஏற்றுக்கொண்ட அவர், எந்தவொரு அரசியல்வாதியையும் விட அதிகமாகச் சாதித்துள்ளார். கனேடிய தமிழர் அவரை தமிழர்தம் உண்மைத் தலைவராக மனதார ஏற்று செங்கம்பளமிட்டு வரவேற்பளித்தனர். சர்வதேச அரங்கின் தூதரகங்களுடனும் தூதர்களுடனும் மதிப்புக்குரிய உறவை அவர் கொண்டிருந்தார். சாதாரண அரசியல்வாதிகளைப் போலன்றி தமிழினத்தின் நன்மையையே முன்வைத்து தன்னை ஓர் ஒப்பற்ற பிரதிநிதியாக அவர் மாற்றியிருந்தார். மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மறைவின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச தூதரகங்களும் வெளிப்படுத்திய இரங்கல்கள், செய்திக் குறிப்புகள் இதைப் பறைசாற்றுகின்றன. அவர் தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் என்று போற்றப்பட்டவர் ஆவர்.



## 'அலைமொழி' நூல் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 5

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் மற்றும் கலாசாரப் பேரவை இணைந்து நடத்தும் 'அலைமொழி' நூல் வெளியீடு, நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த)

## கார், பஸ்ஸுடன் மோதுண்டவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 5

கார் மற்றும் பஸ்ஸுடன் மோதுண்டு படுகாயமடைந்த குடும்பத்தலை வர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை அண்மித்து நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் சுண்டுக்குளியைச் சேர்ந்த யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரான வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார். வீதியில் சென்றுகொண்டிருந்த காரின் கதவு திடீரென திறக்கப்பட்டபோது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபர் குறித்த கதவுடன் மோதி வீழ்ந்தபோது, இ.போ.ச. பஸ் மோதியது என்று ஆரம்ப விசாரணையைக் கொண்டு பொலிஸார் கூறியுள்ளனர்.

படுகாயம் அடைந்த ஆசிரியர், யாழ் .போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று [illegible] தரணி ஒருவரின் [illegible] டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 03 . 1961



மறைவு 03 . 01 . 2022

**தம்பிப்பிள்ளை இலட்சுமிகாந்தன்**
(ஓய்வுபெற்ற இ.போ.ச சாரதி)

புளியம்பொக்கணையை பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு இராமாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இலட்சுமிகாந்தன் கடந்த (03.01.2022) திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (05.01.2022)** மு.ப 10.00 மணிக்கு தபாற்கந்தோர்வீதி சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அவரது பிறப்பிடமான புளியம்பொக்கணைக்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

### சுசிலுக்கு...

தமது அணியுடன் இணைந்து செயற்படுமாறு பதவிநீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில்பிரேமஜயந்தவுக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே கட்சியின்சார்பில் மேற்படி அழைப்பை ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "இலங்கையென்பது ஜனநாயக நாடு. கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது.

அதேபோல மக்கள் பிரதிநிதியொருவருக்கு, மக்களுக்காகக் குரல் கொடுக்கவும், அவர்களின் பிரச்சினைகளை வெளிப்படையாக எடுத்துரைப்பதற்கான சுதந்திரமும் இருக்கின்றது. அந்த உரிமையைப் பயன்படுத்திய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை அநீதியான செயலாகும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்கள் விரோதமான, ஜனநாயகத்துக்கு எதிரான, மக்கள்மீது சுமைகளைத் திணிக்கும், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான மொட்டுக் கட்சி பக்கம் இனியும் இருக்க வேண்டாம். ஜனநாயகத்துக்காக, கருத்துச் சுதந்திரத்துக்காக, மக்கள் பக்கம் நிற்பதற்காக எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

விமல், வாசு, கம்மன்பில போன்றவர்கள் உண்மையாகப் போராடவில்லை. அவர்கள் நடிக்கின்றனர். அதனால்தான் அவர்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை." - என்றார். (கு-44)

---

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நம

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 02 . 1943



இறப்பு 03 . 01 . 2022

**செல்வி சுப்பையா நாகம்மா**

**(முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - புங்குடுதீவு 4)**

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பரவைக்குளம், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி சுப்பையா நாகம்மா 03.01.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம், தர்மலிங்கம், நவரத்தினம், பாக்கியம் மற்றும் சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் சரஸ்வதி, ராசாத்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

63/12, சிவன் வீதி,
பரவைக்குளம், திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 94771-6)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் ஆங்கில பாட போதனாசிரியராக கடமையாற்றி தற்போது மன்னார் தொழில்நுட்ப கல்லூரியில் கடமையாற்றும்

**திருமதி திருவேணி திரிலோஷினி குகன்**

அவர்களின் பாசமிகு தந்தை

**செல்லத்துரை சண்முகலிங்கம்**



அவர்கள் காலமாகியதையிட்டு அவரது இழப்பினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

**யாழ். பல்தொழில்நுட்ப நிறுவன ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(cs 42036) (2.6)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் துறை திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பயிற்சி நெறிகள் எமது நிறுவனத்தில் தை 2022 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது**

- இயந்திரவியல் (Machinist) - NVQ Level 3
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும் (Aluminum Fabricator) - NVQ Level 3
- இப்பயிற்சி நெறிகளான கட்டணம் இலவசம்
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படும் பயிற்சி நிறைவில் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும்

**மேலதிக விவரங்களுக்கு
இயக்குநர்
தொழில்நுட்ப நிறுவனம்
வட்டுக்கோட்டை.**

Tel.Phone: 021 321 3139 / 021 225 0975
Email : ejcit@sltnet.lk

(cr.36 910 (2.6)

---

## மரண அறிவித்தல்



## திருநாவுக்கரசு கணேசன்

**(முன்னாள் சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்-சாரதி)**

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு கணேசன் அவர்கள் கடந்த (03.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு-நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்ற இராசையா-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரமதியின் அன்புக்கணவரும் ஜெனாத்தனி, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தினேஸ், லக்ஸ்சா, பபித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் டியா, மாயா, கவின் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற பொன்னம்பலம், அற்புதராணி, புஸ்பராணி, சண்முகசுந்தரம், இந்திரராசா, செல்வராணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், காலஞ்சென்ற அசோக்குமார் மற்றும் ராஜகுமார், மகேந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P : 0772833856

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



இணுவில் தெற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

**தம்பையா வேலாயுதபிள்ளை**

**(ஓய்வுநிலை அதிபர்)**

கடந்த (06.12.2021) திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவினால் நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் எமக்கு ஆறுதல் வார்த்தை கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்து, மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தியோருக்கும் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் வைத்தியசாலை கொண்டு சென்ற வேளை அவசர சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவப் பணியாளர்களுக்கும், மரணச்சடங்கின்போது உடன் நின்று தோள் கொடுத்து உதவிய நல்லுள்ளங்களிற்கும், மரணச் சடங்கில் அஞ்சலி உரை நிகழ்த்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (05.01.2022) புதன்கிழமை இணுவில் தெற்கு, இணுவிலில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமவண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

(CS 94911-6)

---

## 13 இந்திய மீனவர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதி

*விளக்கமறியல் மேலும் நீடிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

13 இந்தியமீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெ. சுதாகரன் தெரிவித்தார்.

அத்துடன், மீனவர்களிடம் வாக்குமூலம் பதிவு பெறுவதற்கும் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளுக்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

கடந்த 21ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த மீனவர்கள் 2 படகுகளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் ஏற்கனவே ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோதே மேற்படி அனுமதி வழங்கப்பட்டது. (கு-25)

---

## இசை நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.5

அஜபன்ராஜ் வழங்கும் 'அம்புலு' என்ற திரைப்படத்தின் இசை நாடா வெளியீட்டு விழா, எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ராஜா சினிமா தியேட்டரில் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈர விழிகளுடன் 16 ஆம் ஆண்டு நினைவில்

மண்ணுலகில் 23 - 02 - 1951

விண்ணுலகில் 02 - 01 - 2006



### திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி: வளர்பிறை திருதியை (05.01.2022)

எங்கள் தாயே ஆறாது ஆறாது அழுதாலும் தீராது எம் தாயே!
ஈரெட்டு ஆண்டுகள் கரைந்ததுவே இனிய தாயாக இல்லறத்தில்
- வாழ்ந்தீர்கள் அம்மா!

ஆயிரம் நிலவுகள் வாழ்வில் வந்து மறைந்தாலும்
- ஒற்றைச் சூரியனாய் பிரகாசித்தீர்கள் அம்மா!
அம்மா உங்களது அன்பும் நாங்கள் பட்ட தவிப்பும் ஆறாது அம்மா!
இறுதிவரை சேர்ந்து இருப்போம் என்றிருந்தோமே!
இதுதான் சொர்க்கம் என்று இருந்தோமே!
இமைப்பொழுதுதில் காலனவன் உங்களைக் கவர்ந்தானே!
இக்கணம் வரை உங்கள் நினைவில் கலங்குகின்றோம் அம்மா!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் என்ன?
அன்றும் இன்றும் என்றும் மாறாது
உங்கள் அன்பும் பாசமும் எமது உயிர் உள்ளவரை!

உங்களுக்காக உங்கள் ஆத்ம சாந்திக்கு
என்றும் பிரார்த்தித்து வாழ்கின்ற
மகன்மார், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

இல. 110, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs.916) (2.6)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 - 06 - 1929

மறைவு 05 - 01 - 2013



### அமரர் வைத்தி கணபதிப்பிள்ளை

(மண்டைதீவு)

ஒளிக்கீற்றின் பார்வைதனில்
வளர்ந்து வரும் மரம் போல் - உம்
அரவணைப்பில் எமை கைவசம்
கொண்டு ஆளாக்கினீர் - ஐயா
ஒன்பது ஆண்டுகளாக - அந்த
பாசத்தின் பாரத்தை இழந்து
தவித்துக் கொண்டிருக்கின்றோம் - ஐயா

காலத்தின் கட்டளையோ - ஐயா
எமை தவிக்கவிட்டு சென்றீரோ
கண்கலங்கி நிற்கும் எம்முன்
கடவுளாகிப் போனீரோ

எத்தனை ஆண்டுகள் மாறினாலும்
உம் நினைவு எம்முன் அகலாது - ஐயா
ஒப்பிலா உமை இறைவனிடம்
ஒப்படைத்த இந்த ஒன்பதாம் ஆண்டில்
உம் மாசில்லா ஆத்மாவிற்கு
மலர்தூவி சாந்தி செய்கின்றோம்.

*நினைவுகளுடன்*
குடும்பத்தினர்

(cs.931) 2.6)

## தேவை

### (சாரதி, பொதி சுமப்பவர்)

யாழ்நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு சாரதி, பொதி சுமப்பவர்கள் தேவை. சுய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

(cs.42015) (2.6)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

**வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
**இல.58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

## யாழ் வணிகர் கழகம்
## வருடாந்த பொதுக் கூட்டம்

கொரோனா தாக்கம், மற்றும் நாட்டில் ஏற்பட்ட முடக்கம், அதனால் ஒன்று கூட முடியாத நிலை காரணமாக, 2021ம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டு கம்பனிப்பதிவுச் செயலாளரின் அனுமதியுடன் 29.01.2022 அன்று அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே வணிகர்கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**திகதி : 29.01.2022 சனிக்கிழமை**
**நேரம் : காலை 10.00 மணி**
**இடம் : யாழ் வணிகர் கழகப் பணிமனை**
**165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

செயலாளர்
யாழ் வணிகர் கழகம்

(cr.36968) (2.6)

## கேள்வி திறத்தல் திகதி பிற்போடல்

யாழ்ப்பாணம் மாநகரசபை
வியாபார நிலையங்களில் கட்டணக்கழிவகற்றல்
மற்றும் திரவக்கழிவகற்றல் சேவை

யாழ். மாநகரசபையினால் 30.12.2021 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் கேள்வி திறத்தல் 14.01.2022 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 18.01.2022 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு கேள்வி திறத்தல் பிற்போடப்படுகின்றது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு, யாழ் மாநகரசபை.**

(cr.36967) (2.6)

## விற்பனை பிரதிநிதி தேவை

இலங்கையில் முதல் தர பிரசித்திபெற்ற
**பிளாஸ்ரிக் நிறுவனத்தின்**
உற்பத்தி பொருள்கள் ஆன
**வீட்டுப்பாவனை பொருள்கள்** மற்றும்
**தளபாடங்கள்**
**யாழ். குடாநாட்டில்**
**விற்பனை செய்வதற்கு**
**விற்பனைப் பிரதிநிதிதேவை.**
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்
உரிமை வழங்கப்படும். அத்துடன்
கவர்ச்சிகரமான கொடுப்பனவு
தகுதிக்கு ஏற்ப வழங்கப்படும்.

**ESS JEY Electricals**
No.09, Stanly Rd, Jaffna.
077 773 2863, 021 222 2564,
021 222 7430

(cs.938) (2.6)

### ஆதவன்...

மீட்கப்பட்ட முன்னாள் போராளியான மாணிக்கம் ஜெயக்குமாரின் (ஆதவன்) உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாக, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான இவர், கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி காலை 6 மணியளவில், வழமைபோல நடைப் பயிற்சிக்கு செல்வதாகக்கூறி வெளியே சென்றிருந்தநிலையில், வீடு திரும்பவில்லை. 2 நாள்களின் பின்னர், செப்ரெம்பர் 30 ஆம் திகதி மாலை குறித்த நபர் நவாலிப்பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளது என்று, அப்போதே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் தெரிவித்திருந்தனர். எனினும், அவரது குடும்பத்தினர் தமது பாதுகாப்புக்கருதி இது தொடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

இருப்பினும், இவருடைய வீட்டுக்கும் இவர் சடலமாக மீட்கப்பட்ட பகுதிக்கும் இடையில் நெடுந்தூரம் காணப்பட்டதையடுத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாக இவருடைய உடல் நீதிமன்றக் கட்டளையின்படி உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டது. விசாரணைகள் இடம்பெற்று குறித்த வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட திகதியிடப்பட்டிருந்தது. இந்தநிலையில், குறித்த நபர்.மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தார் என்றும், அதன்காரணமாக அவர் தனது உயிரை மாய்த்திருக்கலாம் என்றும் பல செய்திகள் பரப்பப்பட்டிருந்தமையை தற்போது அறிந்த குடும்பத்தினர் அதை முற்றிலும் மறுத்துள்ளனர். அவர் நல்ல சுகதேகியாக இருந்தார் என்றும், தவறான முடிவு எடுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை என்றும், அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அதனடிப்படையில் அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும்கோரி, நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு 10 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதால் அன்றைய தினம் நேற்றைய விண்ணப்பமும் பரிசீலிக்கப்படும் என்று நீதிமன்று தவணையிட்டுள்ளது.

ஜெயக்குமார், 1994 தொடக்கம் 2009 வரை விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தார் என்பதோடு, அரசியல் துறையின் நிதி தொடர்பான விடயங்களில் ஒரு பொறுப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் சார்பாக, சட்டத்தரணி வி.திருக்குமரன் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார். (த-7)

## பெயர் மாற்றம்

859/16 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **பிலிப்பையா மரியநாயகம் இராயப்பு மனோரஞ்சன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **பிலிப்பையா மனோ** என மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் **மனோ** என கையொப்பம் இடுவேன்.

**பிலிப்பையா மனோ**

(cs939) (2.6)

## இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்
## பட்டத்திருவிழா

ஜனவரி **14** 2022
காலை 9மணி முதல்
காங்கேசன்துறை வெளிச்சவீட்டு அருகே...

| | |
|---|---|
| 1ம் பரிசு | ரூபா 25,000.00 |
| 2ம் பரிசு | ரூபா 20,000.00 |
| 3ம் பரிசு | ரூபா 15,000.00 |

மேலும் 3 ஆறுதல் பரிசுகள்



### சைக்கிள் ஓட்டம்

ஜனவரி **08** 2022
காலை 7 மணி
ஆரம்ப இடம்: இளவாலை சந்தி

| | |
|---|---|
| 1ம் பரிசு | ரூபா 10,000.00 |
| 2ம் பரிசு | ரூபா 5,000.00 |
| 3ம் பரிசு | ரூபா 3,000.00 |



### மரதன் ஓட்டம்

ஆரம்ப இடம்: சித்திரமேழிச் சந்தி
ஜனவரி **09** 2022
காலை 6 மணி

| | |
|---|---|
| 1ம் பரிசு | ரூபா 7,500.00 |
| 2ம் பரிசு | ரூபா 5,000.00 |
| 3ம் பரிசு | ரூபா 3,000.00 |

ஏனைய பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள்
பொங்கல் தினத்தன்று மாலை 3.30 மணி முதல் இளவாலையில்...
தொடர்புகளுக்கு: 0775417659, 0776087318

விளம்பர அனுசரணை: நீதன் றில்லேர்ஸ், இளவாலை, 0777 49 48 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02 . 08 . 1973

மறைவு
28 . 12 . 2019

## அமரர் கிருஸ்ணன் ஜீவாதரன்

(யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)

திதி – 05.01.2022

ஓடி மறைந்தது இரண்டு ஆண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(cs42031) (2.6)

குடும்பத்தினர்.

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
08 . 07 . 1943

இறப்பு
05 . 01 . 2015

## அமரர் சிதம்பரப்பிள்ளை கனகசிங்கம்

(நொச்சிமோட்டை, ஓமந்தை, வவுனியா)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை
அன்பாய் பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே
- சென்றீர்கள்

ஆண்டுகள் ஏழு பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றி பணிந்திடுவோம்

(cs.41907) (2.6)

மனைவி - மலர்மாலை
கனகசிங்கம்

# நினைவஞ்சலி

12ஆம் ஆண்டு 47ஆம் ஆண்டு



மண்ணில் 03.05.1922
விண்ணில் 05.01.2010



மண்ணில் 16.03.1927
விண்ணில் 22.12.1974

**அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**

**அமரர் கனகாம்பிகை சபாரத்தினம்**

அன்பும் பண்பும் ஒன்றிணைந்த எங்கள்
அம்மா, பப்பா வணங்குகின்றோம் !
ஆண்டுகள் பல ஆனாலும் என்ன
துன்பத்திலும் இன்பத்திலும் தேடுகின்றோம் !
துயரத்தில் துவளுகின்ற போதெல்லாம் அம்மாவின்
கம்பீரத்தை எண்ணி நிமிர்கின்றோம் !
இன்பத்தில் சிரிக்கின்ற போதெல்லாம் பப்பாவின்
புன்னகையின் அழகினிலே மலர்கின்றோம் !
தெய்வங்களே ! எம்மைத் தூக்கி வளர்த்தீர்கள் !
துணையாக நின்றீர்கள் போற்றுகின்றோம் !
மண் மீது நாம் வாழும் காலம் வரை உங்கள்
அன்பான நினைவினில் வாழ்ந்திடுவோம்.

இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

(cr.36963) (2.6)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
14 . 02 . 1943

உதிர்வு
31 . 12 . 2021

## வலன்ரீனா (ராணி) ஜோண்கிங்சிலி

கரம்பன் கிழக்கை பிறப்பிடமாகவும் இல.146, பாங்ஷல் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட வலன்ரீனா (ராணி) ஜோண்கிங்சிலி கடந்த (31.12.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றர்வளான சிங்கராயர் - மேரிஜோசப்பின் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முடியப்பு - ரோசமுத்து தம்பதியரின் மருமகளும், ஜோண்கிங்சிலியின் (ஆனந்தராசா - ஜேர்மனி) அன்பு மனைவியும், ஜெயவேர்ஜினியின் (கனடா) அன்புத் தாயாரும், டன்ஸ்ரனின் (கனடா) மாமியாரும், கிஷானியின் (கனடா) அன்புப் பேர்த்தியும், பிரான்சிஸ்கம்மா (விமலா - கனடா), ரோஸ் செலஸ்ரினா (ராஜகுமாரி - கனடா), அந்தோனிப்பிள்ளை (கொலண்ட்), சிறில் (சிறி - கனடா), மாகிறேற் (ராஜினி - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சேவியர் மற்றும் றெஜினா (மணி), கிளாறா (மலர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (06.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வண்ணம் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

021 222 7871

(cs 937) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலையில் வெடித்துச் சிதறிய எரிவாயு அடுப்பு!

கொடிகாமம், ஜன. 5

தென்மராட்சி மீசாலை மேற்கிலுள்ள வீடு ஒன்றில், சமையல் எரிவாயு அடுப்பு நேற்று வெடித்து சிதறியது.

இரவு நேர சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அது வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (து-27,159)


## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 01.02.2022 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனை சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 85,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் "ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 20.01.2022**

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**04.01.2022**

(2.6)


## மரண அறிவித்தல்

### கலாநிதி வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்)**



யாழ் நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம் அவர்கள் (03.01.2022) திங்கட்கிழமை அன்று இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராஜசூரியர், மனோன்மணி தம்பதியரின் மருமகனும், குணநிதியின் அன்புக் கணவரும், அனித்தா (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி - கொடிகாமம்), அகிலன் (முன்னாள் முகாமையாளர் சம்பத் வங்கி யாழ்ப்பாணம் மற்றும் **J Guest** உரிமையாளர்) வினுதா (முன்னாள் செலான் வங்கி ஊழியர் - தற்போது சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதியுகன் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி - ஸ்டான்லி வீதி), ஜிவோஜனா (முன்னாள் ஹட்டன் நஷனல் வங்கி ஊழியர்) ஜெனார்த் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவினயா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சாயிநாஷ், சாயிகீர்த் (சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பேரனும், தனபாலசிங்கம், ஜெயபாலசிங்கம், சாந்தநிதி, காலஞ்சென்ற சத்யநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரன், கலாநிதி, தயாநிதி, ஈஸ்வரகுமாரன், சாந்தநிதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானதிற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**46/2, கொழும்புத்துறை வீதி,**
**சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**
**021 222 6017**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 945) 1-6

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 12 . 1950



இறப்பு 04 . 01 . 2022

### சின்னையா கமலேஸ்வரன்

**(ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்)**

காங்கேசன்துறையை பிறப்பிடமாகவம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கமலேஸ்வரன் நேற்று (04.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகோவைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா தங்கலெட்சுமி தம்பதியரின் மகனும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்திகேசு நல்லதங்கம் தம்பதியரின் மருமகனும், லீலாவதியின் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், கார்த்திகாவின் அன்பு அப்பாவும், அருளேசனின் அன்பு மாமனாரும், அஸ்வின், அணோஸ்காவின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற சிவலிங்கம் விஸ்வநாதன் அஞ்சனாதேவி மற்றும் மாணிக்கவள்ளி, கமலநாதன் ஆகியோரின் சகோதரனும், கனகரெத்தினம் மகேஸ்வரி காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் குகனேசன், புகனேஸ்வரி, பத்மநாதன் யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை நடைபெற்று பி.ப 2.00 மணிக்கு பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.70/4, ஈச்சமோட்டை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 5291 734**

(CS 944)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 . 07 . 1949



அம்பாள் பாதங்களில் 04 . 01 . 2022

### தெய்வத் திரு. வேலுப்பிள்ளை நடராஜா

(உரிமையாளர் சேகர் மோட்டார்ஸ்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வத் திரு. வேலுப்பிள்ளை நடராஜா நேற்று (04.01.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஞானகௌரியின் அன்புக் கணவரும்,சிந்து, வைகை, சத்தியேந்திரா, யுகேந்திரா, சனேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், டினேஸ், றமணா, ஜீவிதா, தனோஜா, சாலினி ஆகியோரின் மாமனாரும், கவின், பிரணிதா, கஸ்வின், அதிர்திரி, தெய்வின், அகரன், தாமிரன், பிரஜீன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சந்திரசேகரம்பிள்ளை, பொன்னம்மா, பூபாலசிங்கம், மயில்வாகனம், யுகராசா, கணபதிப்பிள்ளை, குகநேசன் ஆகியோரின் சகோதரனும், விமலட்சுமி, மருதலிங்கம், காலஞ்சென்ற விஜயலட்சுமி, பத்மினி, சாந்தினி, தயாநிதி, வனஜா, விமலாதேவி, தயாளன், குகதாசன், நிர்மலா, சிவனேசன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 791 3930**

(cs 42033) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு...

வவுனியாவில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்துக் கட்சிகளும் இணைந்து தயாரித்த வரைவை தமிழ் அரசுக்கட்சி முற்றாக நிராகரிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார். எனினும், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், இன்னும் ஓரிரு நாள்கள் பிந்தினாலும்கூட இறுதிவரைவைத் தயாரித்து அனைவரும் கையொப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்புவோம் என்று உறுதிமொழி அளித்துள்ளார்.

நாம் எடுத்த முயற்சியைக் கைவிடப்போவதில்லை. வார்த்தைப் பிரயோகங்களைச் சாட்டாகவைத்துக்கொண்டு ரெலோ எடுத்த முடிவுக்குப்பின்னால் நாங்கள் செல்வதா? என்ற சிறுபிள்ளைத்தனமான அல்லது தமிழ் மக்களை ஏமாற்றநினைக்கின்ற தமிழ் அரசுக்கட்சியின் செயற்பாட்டை எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் விளைவுதான் '13' ஆவது திருத்தம். ஆகவே ஒன்றுக்கொன்று முடிச்சுப்போட்டு அதுவேறு இதுவேறு, தலைப்பு வேறு, வார்த்தைப் பிரயோகங்கள் வேறு என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமானது.

இந்தியாவின் பங்களிப்பில்லாமல் எமது அரசியல் ரீதியான பிரச்சினைக்கு நிச்சயமாக நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப்போவதில்லை. அதை உணர்ந்து அனைத்து தமிழ்த் தேசியக்கட்சிகளும் செயற்படவேண்டும். அந்தவகையிலேயே இந்த முயற்சியை எடுத்துள்ளோம். இது நிச்சயம் வெற்றிபெறும்.

இந்த விடயத்தில் எந்தவொரு ஆலோசனையும் இந்தியாவிடமிருந்து நாம் பெறவில்லை. இந்தியா எமக்கு எந்தவித அழுத்தங்களையும் வழங்கவில்லை. ஆனால், நாம் பாதிக்கப்பட்ட இனம் என்றவகையில், கடந்தகாலங்களில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு வழியிலோ எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள் என்ற ரீதியில், அவர்களால் கொண்டுவரப்பட்ட சர்வதேச ஒப்பந்தம் என்ற ரீதியில் அழுத்தங்கள் என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் விடுதலைக்காக செய்கின்ற பெரிய கைங்கரியமாக இதனைப் பார்க்கின்றோம் -என்று தெரிவித்தார். (த-110)

## வெளிநாட்டு...

வைப் பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"விரைவில் மாகாணசபைத் தேர்தல் வருகிறதா என கேள்வி எழுப்பப்பட்டது. அரசால் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஊகமாக வைத்தே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கலாம். தேர்தல் தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை.

தேர்தலை நடத்துமாறு வெளிநாடுகளிலிருந்து அழுத்தமும் பிரயோகிக்கப்படவில்லை. அவ்வாறு பிரயோகிக்கப்பட்டாலும் அதற்கு அடிபணியும் கலாசாரம் எம்மிடமில்லை. பண வீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இடைக்கால நிவாரணத்தை வழங்கும் நோக்கிலேயே சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன" -என்றார். (த-44)

## சுசில் பிரேமஜயந்தவின்...

வங்களின் அடிப்படையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அமைச்சின் பதவியைப் பறித்து உத்தரவிட்டார்.

கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்த சுசில் பிரேமஜயந்த, அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துவருகின்றார்.

"அந்நிய ஆக்கிரமிப்பின்போதுகூட, எமது நாட்டு விவசாயம் இந்தளவுக்குப் பாதிக்கவில்லை. ஆனால், தற்போது தவறான முடிவுகள் எடுக்கப்பட்டமையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எம்மைப் போன்றவர்கள் முடிவெடுக்கும் இடத்தில்லை. ஓரமாக நிறுத்தப்பட்டுள்ளோம். விவசாயத்துறை அமைச்சர் 'பெயில்'. உரியவகையில் செயற்படக்கூடிய - தகுதியானவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும்" - என கடந்த முதலாம் திகதிகூட அவர் விமர்சித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இராஜாங்க அமைச்சராகச் செயற்பட்ட சுசில் பிரேமஜயந்த மஹிந்த ஆட்சியின்போது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை வகித்தவர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டவர்.

2015 ஆட்சிமாற்றத்தின் பின்னர் மைத்திரி அணியில் சேர்ந்தார். அதன்பின்னர் மஹிந்த பக்கம் சென்றார். எனினும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சியில் அவருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. (த-44)

## அரசியல்...

பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

"நான் 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் வந்தேன். வந்தகையோடு அமைச்சரானேன். மூன்று ஜனாதிபதிகளின்கீழ் பணியாற்றியுள்ளேன். எனவே, இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை பெரிய விடயமல்ல. எனக்கென்று தொழிற்துறை (சட்டத்தரணி) இருக்கின்றது. நாளையிலிருந்து (இன்று) அங்கு செல்வேன்.

பதவி விலகல் பற்றி எனக்கு அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்படுவதும் இல்லை. ஊடகங்கள் வாயிலாகவே அறிந்தேன். பதவியிலிருந்து நீக்குவதற்கு காரணம் சொல்ல வேண்டியதில்லை. நீக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

முதலாம் திகதி சந்தைக்குச் சென்றிருந்தேன். கேள்வி எழுப்பப்பட்டது. விவசாயத்துறை அமைச்சர் பெயில் என்றேன். மக்கள் சார்பிலேயே நான் கதைத்தேன். எனது எதிர்கால அரசியலுக்கான ஆசீர்வாதமாகவே இந்த நடவடிக்கையைப் பார்க்கின்றேன். மக்களுக்காகவே நான் கதைத்தேன். அதற்காகவே மக்கள் எம்மை நியமித்துள்ளனர். என்னைப் பதவிநீக்கம் செய்யாமல் இருந்திருந்தால்தான் வியப்படைந்திருப்பேன்" - என்றார். (த-44)

## இன்னொரு...

மாக அடுத்த 48 மணி நேரத்துக்குள் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரையும் பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனடிப்படையில், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில அல்லது வாசுதேவ நாணயக்கார ஆகிய மூவரில் ஒருவரின் பதவியே பறிபோகலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியமை, அமைச்சரவைக்கு எதிராக நீதிமன்றுக்குச் சென்றமை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளமை இதற்கான காரணம் என தெரியவருகிறது.

**அமைச்சர் தினேஷ் 'கப்சிப்'**

இதேவேளை, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கல்வி அமைச்சுக்கு நேற்றுப் பயணம் செய்தார்.

இதன்போது, சுசில் பிரேமஜயந்தவின் பதவிநீக்கம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதில் வழங்குவதை அமைச்சர் தினேஷ் குணவர்தன தவிர்த்தார். அரசாங்கத்தால் இவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்க முடியுமா?, பதவி நீக்கம் தொடர்பாக அமைச்சர்கள் அமைதி காத்தமை ஏன்?, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்குப் பயமா? என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் தினேஷ், "இந்த விடயத்தில் தான் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த விடயத்தில் அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்படவில்லை. சுசில் பிரேமஜயந்தவின் பதவிநீக்கம் குறித்த கேள்விக்கு, அவரே பதிலளிக்க வேண்டும்" - என்றார். (த-இ)

## குறைகளை...

டும் என்றும் 19ஆவது அரசமைப்புத் திருத்தத்திலுள்ள குறைகளைத் திருத்தி மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். மாத்தளை கிரேண்ட் மவுன்டன் ஹொட்டலில் நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியொரு கட்சியால் மீண்டும் ஆட்சியமைக்க முடியாது. அதனால் திருடர்கள் எதும் ஊழல்வாதிகளும் ஆதிக்கம் இல்லாத புதிய கூட்டணி அரசாங்கத்தின்கீழ், பரந்துபட்ட புதிய அரசியல் கொள்கையொன்றைத் தயாரித்து புதிய பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருக்கிறது.

பிரதேச சபையிலிருந்து நாடாளுமன்றம் வரையில் சகல பிரிவுகளிலும் திருடர்களே இருக்கிறார்கள். பிரதேச சபையின் மணல் அனுமதிப் பத்திரத்தினூடாகவும் பணம் உழைக்கிறார்கள். நாடாளுமன்றுக்குச் சென்றதும் வியாபார நடவடிக்கைகளினூடாக விலைமனுக் கோரல்களினூடாகவும் பணம் உழைக்கிறார்கள் -என்றார். (த-இ)

## யாழில்...

தும் கிருமி காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இவர், சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளுக்கு அண்மையில் சென்றுள்ளார். இது ஓர் ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடியது என்று, யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்துள்ளார். அண்மையில் மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டமை தொடர்பாக அவர் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில்,

நமது நாட்டிலிருந்து பலர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகச் செல்வதற்கு எத்தனிக்கின்றனர். அவர்கள் அங்கு செல்வதற்காக முதலில் ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்கிறார்கள். அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான பயணங்கள் தடைப்பட்டதும் மீண்டும் திருட்டுத்தனமாக எமது நாட்டுக்குள் வருகின்றார்கள். இவர்கள் மலேரியா உள்ள இடத்திலிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு அந்த நாடுகளில் சிலவேளை மலேரியா காய்ச்சலும் ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறு வருபவர்கள் மீண்டும் எமது பிரதேசத்தில் மலேரியாவை தோற்றுவிக்கின்றார்கள். மிக அண்மையில் 3 மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இது பெரும் அபாய நிலைமை. எனவே, நாங்கள் எமது மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். காய்ச்சல் இருக்கும் வேளையில் அவர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டால் மலேரியா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். தற்போது மலேரியா நோய் இனங்காணப்பட்டால், மலேரியா கிருமியானது ஒருவரில் குறைந்தது 21 நாள்கள் வரை இருக்கலாம். அத்துடன் நுளம்பிலும் 21 நாள்கள் வரை இருக்கலாம். எனவே, 21 நாள்களுக்கு நாங்கள் எமது சுற்றாடலை சுத்தப்படுத்துவதன் மூலமாக மலேரியா கிருமி எமது சமூகத்தில் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். குறிப்பாக, கொரோனாத்தொற்றுக்குப் பின்னர் பல நாடுகளில் மலேரியா கண்டறியப்பட்டுள்ளது. -என அவர் மேலும் தெரிவித்தார். (த-27)

## பனியும்...

வரும் 09ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிவரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது தொடக்கம் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போதைக்கு வடக்கு மாகாணத்தின் உள்நிலப் பகுதிகளில் குறிப்பாக ஏ-9 வீதியை அண்மித்த பகுதிகளில் இரவு வெப்பநிலை 17 செல்சியஸ் வரை குறைவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. அடுத்தவாரம் மழையை எதிர்பார்க்கமுடியும் என்பதால், விவசாயிகள் நெல் அறுவடையை முன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர், நா. பிரதீபராஜா குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## வயிற்றைக்....

இந்தச் சம்பவத்தில், வேலணை 4ஆம் வட்டாரம் மண்கும்பானைச் சேர்ந்த நல்லையா கணேஸ்வரன் (வயது - 68) என்பவரே உயிரிழந்தார்.

அவர், மண்கும்பான் பிள்ளையார் கோவில் மெய்ப்பாதுகாவலராக கடமையாற்றிவந்தார்.

அவரே கோவில் மாடுகளையும் பராமரித்துவந்தார். கடந்த 29ஆம் திகதி அவர், கோவில் மாடு ஒன்றின் கயிற்றை அவிழ்க்கச்சென்றபோதே மாடு கொம்பால் குத்தியது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த போதும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார். மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.கிழங்கு வெங்காயம் விலை சரிவு



கொழும்பு, ஜன. 5

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் விலை சந்தையில் குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றின் வரி குறைக்கப்பட்டதே இதற்கான காரணமாகும்.

நிதியமைச்சு கடந்த 31 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் சம்பந்தமாக சுங்கவரியை 30 ரூபாவால் குறைத்திருந்தது. சந்தையில் இவற்றுக்கு இருந்த விலையைக்குறைப்பதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பலாலி வீதியிலிருந்து 500 m தூரத்தில் ஊரெழு பொக்கனை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.

**077 6585 999**

(CS 935) 1-6

## கணக்காளர் தேவை

யாழ் நாச்சிமார் கோவிலடியில் தளபாட விற்பனை நிலையம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை.

(CS 950) 1-6

தொடர்பு: **076 8294 100**

## SENG. ACADEMY

**IELTS** - New batch ஆரம்பம்

Sp.Offer 10 % Discount உடன்
Basic & Advanced grammar Class
Free + Handouts +CDs

53, சிவகுருநாதர் வீதி, Brown Rd.
**077 798 9830**

GR.6,7,8,9 Eng Spoken with grammar

அமரர் வே. அன்பழகன் அவர்களின்
அன்பொளி கல்வியகத்தின்
(பிரபல புலமை ஆசான் ப.பத்மநேசன்)
**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022**
இற்கான வகுப்புக்கள் மற்றும் ஏனைய
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

அனுமதிகளை இன்று 05.01.2022 புதன்கிழமையிலிருந்து 08.01.2022 சனிக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். குறிப்பு:- வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள்.

நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

"சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்"

இயக்குநர்


# மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 03 . 1959

இறப்பு 04 . 01 . 2022

## நல்லையா கணேஸ்வரன்

மணகும்பான் 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா கணேஸ்வரன் நேற்று (04.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா - அன்னபூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பற்குணதேவியின் பாசமிகு கணவரும், கனகேஸ்வரி, சுபத்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலட்சுமி, மனோன்மணி, பன்னீர்ச்செல்வம், புஸ்பராணி, சுந்தரலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன், சத்தியரூபன், கலாரூபி, அகிலக்காந், கவிதா, மதீசன், தினேஸ், ரூபமயூரன், பத்மரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாநிதி, தங்கரெத்தினேஸ்வரி, மாதங்கி, அருள்குமரன், துஷாந்தி, தர்சினி, சஜிவர்ணன், துஷ்யந்தி, கஜமுகன், சஞ்சயன் ஆகியோரின் மாமனாரும், விசாலன், பவிசன், சதுஜா, யதுசன், டினுஜா, கோபிகாந், டில்சிகா, யனுசிகா, கவிக்குமரன், யாதவன், யாதவி, நிதுர்ஷன் கபிஷன், தனுசிகன், பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 134 7108**

(cs 937) (2.6)


# பான்சி & கொட்டன் புடவைகள் மலிவு விற்பனை

## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக

ரூ.3000/- முதல் 10,000/- வரை விற்பனை செய்யக்கூடிய

ரூ. **1000/-** மட்டுமே

## 5 நாட்களுக்கு மட்டுமே!

with NEW STOCK

இன்று 5/01/2022 - 10/01/2022 வரை
காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை



**இடம்: நல்லூர் மயிலூரன் அரங்கம் திருமண மண்டபம்.**
590/5, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் கோவில் முன்பாக), யாழ்ப்பாணம்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எமது புடவைக் காட்சியறைகள் மூடப்படுவதால்
சமநிலையான **90%** விலைக் கழிவுடன்

யாழ்ப்பாணத்துப் பெண்களே நீங்கள் இதுவரை கண்டிராத புத்தம் புதிய டிசைனர் புடவைகள்

- பெங்களூர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- மணிப்பூர் கோட்டா, செக் சேலை, Rs. 1000/-
- ப்யூர் ஷி/பான் டிசைனர் சேலை, Rs. 1000/-
- தானி ஷி/பான் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பாந்தனி பிரிண்ட் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பேப்பர் சில்க் டிசைனர் சேலை, Rs. 1000/-
- 90 கிராம் டிசைனர் சேலை, Rs. 1000/-
- மைசூர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பனாரசி பார்ட்டிவேர் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பேன்சி பார்ட்டிவேர் சேலை, Rs. 1000/-
- டிஷ்யூ டிசைனர் சேலை, Rs. 1000/-
- இத்தாலியன் க்ரேப் டிசைனர் சேலை, Rs. 1000/-
- பெல்காம் டிசைனர் சேலை, Rs. 1000/-
- காஷ்மீரி டிசைனர் சேலை Rs. 1000/-

மறவாதீர்கள் எங்களிடம் எந்த சேலை எடுத்தாலும் ஒரே விலை

ரூ. **1000/-** மட்டுமே

WANTED SALES GIRLS | ☎ 0766-427996 | ENTRY FREE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.